www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண்ணுரிமை

செப் - டிசம்பர் '99




எங்கள் கந்தைக்கு பதிலாய்
கிழியும் காகிதம் இருக்கு....
ஆளும் கூட்டத்தின் பசிக்கோ
எங்கள் ரத்தம்தான் எஞ்சியிருக்கு!

படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமை

6 - 6,

7 - 1

செப் - டிசம்பர் 99

தனி சுற்றுக்கு மட்டும்

நன்கொடை

ரூ. 4.00

ஆண்டு சந்தா

ரூ. 30.00

**வெளியீடு...**

தமிழ்நாடு

பெண்ணுரிமைக் கழகம்

**தொடர்புக்கு...**

அஜிதா

த.பெ.எண். 6937

கே.கே. நகர் தபால் நிலையம்

கே.கே.நகர்

சென்னை - 78

**உள்ளே...** **பக்கம்**

| | |
|---|---|
| பெண் உரிமைக்காக | - 3 |
| பெருகி வரும் வரதட்சணைக் கொடுமைகள் | - 5 |
| சுதந்திரம் (கவிதை) | - 8 |
| விண்ணை முட்டும் விலைவாசி | - 9 |
| பழைய சீனாவின் தேசிய காங்கிரஸும் - என் நினைவுகளும் | - 10 |
| வீரம் செறிந்த சாராய எதிர்ப்புப் போர் | - 15 |
| காம்ரேட் - நூல் அறிமுகம் | - 16 |
| எதிரொலிப்பு | - 17 |
| பெண் விடுதலைக்கான மூல வேர்கள் | - 19 |
| வேலையில்லாத் திண்டாட்டம் - (கவிதை) | - 24 |
| விரலுக்கேத்த வீக்கம் (பட விமர்சனம்) | - 25 |
| மாஞ்சோலையில் கொலைவெறித் தாக்குதல் | - 27 |
| சுதாவுக்குக் கடிதம் | - 28 |
| சாப விமோசனம் | - 37 |
| பெல்லி லலிதாவின் கனவை நனவாக்குவோம் | - 43 |
| எனக்கு பெயர் தான் பெண்ணா - (கவிதை) | - 44 |

படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

அன்பார்ந்த நண்பர்களே!

பி.ஜே.பி. யின் 13 மாதகால ஆட்சி, ஜெயலலிதாவின் வீரதீர செயலால் கவிழ்ந்ததும், இதனால் சமீபமாக நடைபெற்ற தேர்தலையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். 13 முறை தேர்தல் வந்துள்ள போதிலும் எந்த மாற்றமும் நடைபெறவில்லை. அதற்கு மாறாக இன்னமும் மக்களின் மீது சுமைகள் ஏற்றப்பட்டதுதான் மிச்சம். போன தேர்தலிலேயே அதிக இடங்களில் அரசியல்வாதிகள் மீது மக்களின் வெறுப்பு பல விதங்களில் வெளிப்பட்டது. இதனாலேயே இம்முறை பல பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து பேசினார்களே ஒழிய யாரும் பகுதிகளுக்குள் செல்லவில்லை. இதன் காரணம் போன முறை செருப்புகள் பறந்து வந்தது போல் இந்த முறையும் நடைபெற்றுவிட்டால்? என்ற பயத்திலேயே யாரும் பகுதிக்குள் செல்லவில்லை. அப்படியும் சேலத்தில் மக்களின் கோபத் தீ பொதுக்கூட்டத்தில் வாழப்பாடிக்கு செருப்பு மாலை அணிவித்ததில் தெரிந்தது. பிரச்சாரமும் முடிந்து ஓட்டுப்பதிவு நடைபெறுகையில் பல பகுதிகளில் மக்கள் ஓட்டுப் போடாமல், தேர்தலை புறக்கணித்துள்ளனர்.

குறிப்பாக, செங்கல்பட்டு, திருச்சி போன்ற இடங்களில் இத்தேர்தல் புறக்கணிப்பு மிக சிறப்பாகக் கூட நடைபெற்றது. ஆனாலும் பி.ஜே.பி எப்படியாவது வரவேண்டும் என்பதற்காக ஆளுங்கட்சிகள் உள்ள இடங்களில் காக்கிசட்டைகளின் உடந்தையுடன் கள்ள ஓட்டு வேட்டை மிக ஜரூராகக் கூட நடைபெற்றது. முக்கியமாக தி.மு.க. தெலுங்கு தேசக் கட்சிகள் 'கின்னஸ் சாதனையே புரிந்துள்ளனர். இச்சாதனைகள் பல இடங்களிலும் நடைபெற்றதால் பி.ஜே.பி. கூட்டணி அதிக சீட்டுகள் வித்தியாசத்தில் ஆட்சி பீடத்தில் அமரும் வாய்ப்பை மறுபடியும் பெற்றுள்ளது. ஆட்சிக்கு அமர்ந்து ஒரு மாதம் கூட நிறைவடையவில்லை. அதற்குள் பி.ஜே.பி. யின் வானர சேனைகள், (ஆர்.எஸ்.எஸ்., விஷ்வ இந்து பரிஷத், சங்பரிவார்) அவர்களின் வானரத்தனத்தைக் காட்டத் தொடங்கிவிட்டன.

மத சார்பற்ற ஆட்சி அமைப்போம் என்று கூறி, அதற்கு மாறாக இந்தியா ஒரு இந்து நாடாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதே பி.ஜே.பி. யின் கொள்கையாக உள்ளது. இதன் தொடக்கமாகவே போப் ஆண்டவ இந்தியாவிற்கு வருகைத் தருவதை எதிர்க்கிறது. போப்பின் உருவ பொம்மையை எரித்தது. 16ம் நூற்றாண்டில் கேரளாவிலும், கோவாவிலு

www.padippakam.com

மக்களை துன்புறுத்தி கிறித்துவ மதத்திற்கு மத மாற்றம் செய்ய வைத்ததற்கு இப்பொழுது போப் ஆண்டவர் மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அவரை இந்தியாவிற்குள் அனுமதிக்க மாட்டோம் என்று கூறி ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றன, வானரப் படைகள்!.

இந்த வானரப் படைகளின் வேலையே ,இல்லாததை இருந்தது என்றுக் கூறிவதுதான். பாபர் மசூதி இருந்த இடத்தை ஆழத்தோண்டினால் இராமர் கோவில் இருந்தது தெரியும் என்று கூறியது. மதுராவில் கிருஷ்ணன் பிறந்தார் என்று கூறியே இவ்வளவு நாள் காலத்தை ஓட்டியது. இதைக் காரணம் காட்டி முஸ்லீம் மக்களை அடித்து உதைத்தது. பிறகு ஆட்சிக்கு வந்ததும் தனது இந்து வெறித்தனத்தை கிறித்துவர்கள் மீது திருப்பியது. கிறித்துவ மதம் மக்களை வற்புறுத்தி மதம் மாறச் செய்கிறது என்று கூறி, மத்திய பிரதேசத்தில் நான்கு கன்னியாஸ்திரிகளை மானபங்கப்படுத்தியது. இதன் தொடக்கமாக சிறிது நாட்களிலேயே ஒரிஸ்ஸாவில் பிரச்சாரம் செய்ய வந்த ஆஸ்திரேலிய பாதிரியாரையும், அவரின் மகன்களையும் தீயிட்டுக் கொளுத்தியது. சமீபமாக தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, பீகாரில் ஒரு கன்னியாஸ்திரியை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கி உள்ளனர். ஒரிஸ்ஸாவிலும் பாதிரியார் அருள்தாஸை வெட்டிக் கொன்றதுடன், ஒரு முஸ்லீம் வியாபாரியையும் கொன்று தனது இரத்த வெறியைத் தீர்த்துக்கொண்டது.

இவ்வளவு கொடூரங்கள் நடந்தும் கூட ஆஸ்திரேலிய குடும்பத்தைக் கொடூரமாக கொன்ற நிகழச்சியை பி.ஜே.பி. யின் கை கூலியான 'வாத்வா கமிஷன்' நடைபெற்ற கொடூரத்திற்கும் பஜ்ரங்தள் அமைப்புக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை, என்று கூறி முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்து விட்டது!

13 மாத ஆட்சியிலேயே பி.ஜே.பி. யின் ருத்ர தாண்டவங்கள் சிறுபான்மையினரைக் கொடூரமாகத் தாக்கியுள்ளது. இப்பொழுது இன்னும் உறுதியாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள சூழலில் பாசிச ஆட்சி நடைபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதிக சீட்டுகள் வித்தியாசத்தால் முன்னனியில் இருப்பது தெரிந்தவுடன் 'இடைக்கால அரசு' உடனடியாக டீசல் விலையை உயர்த்தியது. உடனே மாநில அரசும் அரிசி, மண்ணெண்ணெய், பஸ் கட்டண உயர்வு போன்றவற்றின் மூலமாக ஓட்டுப் போட்ட மக்களின் வயிற்றில் அடிக்க ஆரம்பித்துள்ளது. இன்னும் ஐந்து ஆண்டு ஆட்சி புரிந்தால், சிறுபாண்மையினரை ஒடுக்குவதையும், உழைக்கும் மக்களை ஒட்டாண்டி ஆக்கி பாசிச ஆட்சியை நடைமுறைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை

*- ஆசிரியர் குழு*


படிப்பகம்

www.padippakam.com

# பெருகி வரும் வரதட்சணைக் கொலைகள்

தற்போது புதிதாக திருமணமானப் பெண்களின் மரணங்கள் சாலை விபத்து போன்று சாதாரணமான ஒன்றாகிவிட்டது. இளம் பெண்களின் மரணத்திற்கு பெரும்பாலும் வரதட்சணையே காரணமாக உள்ளது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகை மரணங்களை போலீசார், வரதட்சணைக் கொலை, தற்கொலை, விபத்து என்று மூன்று விதமாகப் பிரிக்கின்றனர். திருமணமான இளம் பெண்களின் பெருகி வரும் மரண எண்ணிக்கை அதிர்ச்சியடைய வைக்கின்றன. பெங்களூரில் 1997ல் 1,133 பெண்களும் 1998ல் 1,248 பெண்களும், 1999 ஜூலை வரை 618 பெண்களும் மேலே கூறிய காரணங்களால் மரணம் அடைந்துள்ளனர்.

ஒட்டு மொத்தமாக பார்க்கப் போனால் ஒவ்வொரு மாதமும் கிட்டதட்ட 180 பெண்கள் வரதட்சணை கொடுமையால் உயிரிழக்கின்றனர். இத்தகைய மரணங்கள் செய்தித்தாள்களில் பெரிதும் இடம் பிடிப்பதில்லை. ஒரு மூலையில் இரண்டு வரி செய்தியாக மட்டுமே வருகின்றன. ஆகையால் இவை பெரிதும் மக்களை சென்று அடைவதில்லை. எனவே அவைகளுக்கு தீர்வுகளும் காணப்படுவதில்லை.



வரதட்சணைக்காக கணவனால் கொல்லப்பட்ட பாக்கியம்மா

பெரும்பாலும் வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகிறவர்கள் இளம் பெண்களே! அதிலும் அநேகப் பெண்கள் திருமணமான இரண்டு வருடத்திற்குள் இந்தக் கொடுமைக்கு பலியாகின்றனர். இது வெறும் ஏழைப் பெண்களுக்கு மட்டும் நடக்கும் கொடுமையாக இல்லாவிட்டாலும் பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகும் பெண்கள், ஏழைப்பெண்களும், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த பெண்களுமே. அநேகப் பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிப்புக்குள்ளாவதே அவர்கள் மரணத்திற்கு காரணமாகிறது. வரதட்சணைக் கொலைகள் அதிகமாக நகரங்களில்தான் நடக்கின்றன. மற்ற நகரங்களைப் பற்றி சரியான விவரங்கள் கிடைக்கா விட்டாலும், பெங்களூரில் எடுத்த கணக்கெடுப்பின் படி அந்நகரில் பெருகி வரும் இளம் பெண்களின் மரண எண்ணிக்கை கீழ்காணும் பட்டியல் மூலம் தெளிவாகத் தெரிகின்றது

***பெங்களூரில் அகால மரணம் அடைந்த பெண்களின் எண்ணிக்கை!***

| | கொலைகள் | தற்கொலைகள் | விபத்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1997 | 157 | 546 | 430 | 1,133 |
| 1998 | 126 | 723 | 399 | 1248 |
| 1999 | ஜன-ஜூன் 60 | ஜன-ஜூன் 441 | ஜன-ஏப்ரல் 117 | 670 |

ஆதாரம் - ஃப்ரண்ட் லைன்


படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலான வரதட்சணை மரணங்கள் விபத்துகளாக போலீஸ் தரப்பில் பதிவு செய்யப்படுகின்றன. 'வரதட்சணை மரணங்கள்' என்ற பெயரில் பதிவு செய்யப்படுபவை மிகவும் குறைவே. இதற்கு முக்கிய காரணம் சம்பவங்கள் சட்டப்பூர்வமாக நிரூபிக்கப்படாததுதான். இத்தகைய மரணங்கள் சமையலறை விபத்துகளாக இருப்பதால், ஆதாரமில்லாமல் போகின்றது. எனவே அவை வெறும் 'விபத்துகள்' என்று முத்திரைக்குத்தி போலீஸ் பைலை மூடிவிடுகிறார்கள். ஆனால் விபத்துக்குள்ளானப் பெண்களின் குடும்பங்களை விசாரிப்பதன் மூலம் இத்தகைய விபத்துக்கள் எல்லாம் அப்பெண்களின் கணவன்களாலோ அல்லது அவர்களது குடும்பத்தினராலோ நடத்தப்பட்ட திட்டமிட்ட சதி என்பது தெளிவாகின்றது. பெரும்பாலான வரதட்சணைக் கொலைகளும், தற்கொலைகளும் விபத்துக்களாக சித்தரிக்கப்படுகின்றன. விசாரித்துப் பார்ப்பதினால் சில ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டு தீர்ப்பும் வழங்கப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான சம்பவங்களில் வரதட்சணைக்கொலை என்பது தெளிவாக தெரிந்தாலும் ஆதாரம் இல்லாமல் விபத்துகளாக தீர்ப்பளிக்கப்படுகின்றன

கர்நாடகாவில் 1997ம் ஆண்டில் விபத்துகளாக பதிவு செய்யப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 3,826. அவற்றில் 1, 715 அல்லது 50 சதவீதம் தீவிபத்தினால் ஏற்பட்டது. இந்த 50 சதவீத தீ விபத்துகளிலும் அதிகமானவை 'ஸ்டவ்' வெடித்ததனால் ஏற்பட்டவையே. அதிலும் குறிப்பாக வீட்டின் மருமகள்களே இத்தகைய தீ விபத்துகளுக்கு ஆளாகியுள்ளனர்.

***வரதட்சணைக் கொடுமையால் பெங்களூரில் தற்கொலை செய்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை பட்டியல்***

| 1997 - ஜுன் 1999 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|
| நீரில் மூழ்கி தற்கொலை | 19 | 34 | 9 |
| தூக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை | 108 | 121 | 85 |
| விஷம் சாப்பிட்டு தற்கொலை | 99 | 136 | 60 |
| தீவைத்து தற்கொலை | 224 | 318 | 216 |
| இதர வழிகளின் மூலம் தற்கொலை | 96 | 114 | 71 |
| மொத்தம் | 546 | 723 | 441 |

ஆதாரம் 'ஃப்ரண்ட் லைன்'

எப்படியும் ஒரு நாளுக்கு இரண்டு மூன்று ஸ்டவ்களாவது வெடிக்கின்றன. அதிலும் மருமகள்கள் மட்டுமே இறக்கின்றனர். ஒரு மாமியாரோ அல்லது கணவனோ 'ஸ்டவ்' வெடித்ததனால் இறந்ததாக நாம் கேள்விபட்டிருக்கிறோமா?

இதன் காரணத்தை யோசித்தால் நமக்கு விடையாக கிடைப்பது சட்டம், இத்தகைய 'ஸ்டவ்' விபத்துகளை ஒரு குற்றமாகவே கருதுவதில்லை என்பதுதான். மேலும் காவல்துறையும் இதற்காக ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

பெங்களூரில் உள்ள விக்டோரியா மருத்துவமனைக்கு ஒரு நாளுக்கு ஏழு பெண்கள் இத்தகைய 'ஸ்டவ்' வெடிப்புகளினால் பாதிக்கப்பட்டு, கொண்டு வரப்படுகிறார்கள். அதுவும் பண்டிகைக் காலங்களில் ஒரு நாளைக்கு 10 பெண்கள் கூட வருகிறார்கள்

www.padippakam.com

ஏனென்றால் பண்டிகைக் காலங்களில் கூடுதலாக பெண் வீட்டாரிடம் வரதட்சணைக் கேட்பதால் இத்தகைய மரணங்கள் ஏற்படுகின்றன. 'ஸ்டவ்' வெடிப்பதால் ஏற்படும் மரணங்கள் பெரும்பாலும் மதியம் 1 மணிக்கு ஏற்படுகின்றன. இது சமைக்கும் நேரம் இல்லாததால் பெரும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது. இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்படும் பெண்கள் 70 சதவீதம் அல்லது அதற்கு மேலான தீக்காயங்களுடன் கொண்டு வரப்படுகிறார்கள். அப்படி கொண்டு வரப்படும் பெண்களில் அநேகப் பேர்கள் சிறு குழந்தைக்ளை அநாதையாக தவிக்கவிட்டு இறக்க நேரிடுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களில் 90 சதவீதப் பேருக்கு நீதிமன்றத்தில் நியாயம் கிடைப்பதில்லை. நீதி மன்றங்களும் அப்பாவிப் பெண்களுக்கு உதவி செய்வதில்லை. பணத்தின் அடிப்படையிலேயே நீதிமன்றத் தீர்ப்புகள் அமைகின்றன. பாதிக்கப்பட்ட பெண் வீட்டாரால், நீதிமன்றத்திற்கும், போலீசுக்கும் அலைய முடியாததாலும் பண வசதியின்மையாலும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்காமல் விட்டு விடுகின்றனர். எனவே இத்தகைய குற்றங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன. பாதிக்கப்பட்ட ஏழைகள் நீதிமன்றத்திற்கு செல்லாமலேயே சம்பவத்திற்கு காரணம், விபத்து என்றோ அல்லது அப்பெண்ணுக்கு உடல்நிலை சரியில்லை என்றோ கூறி மறைத்து விடுகின்றனர். இன்னும் கொடுமை என்னவென்றால் பிரச்சனை முடிந்தவுடன் சில பெற்றோர்கள் தனது இரண்டாவது மகளையும் அதே ஆளுக்கு கல்யாணம் செய்து கொடுக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக வரதட்சணை மரணங்களை நீதிமன்றங்கள், சாதரணமாக எடுத்துக்கொள்வதும் வரதட்சணைக் கொலைகள் பெருகி வருவதற்கு முக்கிய காரணமாகும். வரதட்சணை தடுப்பு சட்டம், 498 (A) இந்திய தண்டனைச்சட்டம், முதலிய சட்டங்கள் இருந்தாலும் இவைகள் வெறும் காகித வடிவிலேயே உள்ளன. பாதிக்கப்பட்ட நமது சகோதரிகளுக்கு இச்சட்டங்கள் எவ்வகையிலும் உதவி செய்ததாகத் தெரியவில்லை.



**ஸ்டவ் வெடித்து தீக்காயங்களுடன் காணப்படும் இளம்பெண்**

**இதுமட்டுமில்லாமல், பெருகி வரும் முதலாளித்துவமும், மேலை நாடுகளின் தலையீடுகளும் இந்தியாவில் பணத்தேவையை அதிகளவு உயர்த்தி விட்டன. ஆகையால் உழைக்காமல் வாழ்வதற்கு பெண்ணை ஒரு கருவியாக பயன்படுத்துவதனால் வரதட்சணை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பொருளாசை, பெண்களை வியாபாரப் பொருளாக்கி, விலை பேசி திருமணச்சந்தையில் விற்க வைக்கின்றது.எனவே, இத்தகைய வரதட்சணைக் கொலைகளுக்கு முக்கிய காரணம் கணவனும், அவன் குடும்பத்தாரும், பெண்ணை**



படிப்பகம்

www.padippakam.com

பணம் காய்க்கும் மரமாக நினைக்கிறார்கள், மற்றொரு பக்கம், அரசாங்கமோ, நீதிமன்றமோ தீவிர நடவடிக்கை ஏதும் எடுக்காமல் உள்ளதும் தான்!

பெண்கள் விழிப்புணர்வோடு இருந்து, சட்டமும், சமுதாயமும் அப்பெண்களுக்கு உதவி புரிந்தால்தான் இப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும், இது நடக்க வேண்டுமென்றால் சமுதாய மாற்றம் ஏற்படுவது அவசியம்.

நண்பர்களே!
திருமண சந்தையில்
வியாபாரப் பொருளாக்கப்பட்ட
அக்காக்களும் தங்கைகளும்
கதறி சாவதற்கு
சட்டமும் நீதிமன்றமும் துணையாய் நின்றன.
சமுகம் அவளைக் காப்பாற்ற வில்லை!
ஐயோ! இந்நிலை நீடிக்க வேண்டுமா?
போதும்! போதும்!
நம் சகோதரிகள் நம்மை விட்டுச் சென்றாலும்
அவர்களின் அழுகுரல்களை
வரதட்சணைப் பேயைத்
துரத்தியடிக்கும் கோபக் கனலாக்கி
போராட்டப் பாதையில் அணிதிரள்வோம்!

- தீபா

---

## சுதந்திரம்

*சுதந்திரம் வேண்டும்! சுதந்திரம் வேண்டும்!*
*இங்குள்ள மக்கள் யாவருக்கும்*
*அரசியல் என்னும் குட்டையிலிருந்து*
*சுதந்திரம் வேண்டும்!*
*அறியாமை என்னும் இருளிலிருந்து*
*சுதந்திரம் வேண்டும்!*
*சாதி என்னும் கொடுமையிலிருந்து*
*சுதந்திரம் வேண்டும்!*
*கவிதை என்னும் கற்பனையிலிருந்து*
*சுதந்திரம் வேண்டும்!*
*நிஜம் என்னும் வாழ்க்கைக்கு வந்து*
*சுகம் என்னும் சுதந்திரம் பெற வேண்டும்!*

www.padippakam.com

## விண்ணை முட்டும் விலைவாசி

பேருந்தில் ஏறி ஒரு ரூபாய் கொடுத்து டிக்கட் கேட்டேன் ''ஒரு ரூபாய்க்கு டிக்கட் காலமெல்லாம் மலையேறி போயிடுச்சும்மா... இரண்டு ரூபாய் கொடு '' என்றார் பேருந்து நடத்துனர். ரூ. 1.50 க்கான டிக்கட் கேட்ட மற்றொருவரிடம் ரூ. 3.00 கொடுக்க சொன்னார். இதைப்பார்த்து கொண்டிருந்த பேருந்திலிருந்த ஒருவர் ''ஏற்கனவே மஞ்ச போர்டு பஸ்ஸில 0.25 பைசா அதிகமாக்கி, சாதாரண பஸ்ஸை குறைச்சு மஞ்ச போர்டு பஸ்தான் நிறைய ஓட்டுராங்க... எக்ஸ்பிரஸ், பி.பி.ன்னு அதே வேகத்தில ஓடுற பஸ்ஸில 0.50 பைசா அதிகமாக்கி கொள்ளையடிச்சாங்க... இது போதாக்குறைக்கு சொகுசுப் பேருந்து- ன்னு ரூ. 5.00 - 7.50 ன்னு ஏத்தி மக்கள் வயித்தில அடிச்சாங்க... இப்ப இருக்கிறதையும் விட அநியாயமா பஸ் கட்டணத்தை ஏத்திட்டாங்களே...'' என்று புலம்பினார். அப்பொழுது ஒரு இளைஞன் ''ஓட்டுப் போட்டீங்க இல்ல... பலன பாத்தீங்களா '' என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

வீட்டுக்கு வந்தவுடன் அக்கா, ''ரேசனுக்குப் போனேன் ; ரூ. 2.00 அரிசியெல்லாம் ரூ.3.75வாம். அதுவும் மோட்டா ரக அரிசி தான்'' என்று எந்த அறிவிப்புமின்றி கருணாநிதி அரசு அரிசி விலை ஏற்றியதைக் கூறினார்.

இந்த விலைவாசி ஏற்றத்தைப் பற்றி நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்த போது. ''விலைவாசியை மட்டும் ஏத்துராங்களே; அதுக்கு ஏத்த மாதிரி சம்பளத்தை ஏத்தமாட்டேங்கறாங்களே... போற போக்கப் பார்த்தா ஒரு வாய்க் கஞ்சிக்கு கூட வழியில்லாமல் போயிடும் போலிருக்குதே'' என்று வருத்தத்துடன் கூறினார்.

இப்படி தமிழக மக்கள் விலைவாசி ஏற்றத்தைக் கண்டு விழி பிதுங்கி நிற்க, தமிழக அரசோ, நிதி பற்றாக்குறை, அரிசி பற்றாக்குறை என்று பல்வேறுக் காரணங்களைக் கூறி அரிசி விலையேற்றத்தை நியாயப்படுத்துகிறது. ஏற்கனவே ரூ. 560 கோடி நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழகம் டீசல் விலையை சமாளிக்கவே பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளது என்றும், ஆந்திரத்தையும், கர்நாடகத்தையும் விட தமிழகத்தில் பஸ் கட்டணம் குறைவுதான் என்றும் பூசி மெழுகுகிறது.

ஆனால், யதார்த்தத்தில், மக்களின் வரி பணத்தையெல்லாம் ஊழல்... ஊழல்... என்று ஏப்பம் விட்டு விட்டு இந்த ஆட்சியாளர்கள், உலக வங்கி, ஐ.எம்.எப்பிடம் கையேந்தி நின்ற போது ''கடன் தருகிறோம்; நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்; நாங்கள் போடும் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்; நாங்கள் இந்தியாவில் வந்து போக தடையேதும் இருக்கக் கூடாது...'' என்று கட்டளையிட்டது. இந்த கட்டளைகளை ஏற்றுக்கொண்டு புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் விளைவுதான் இந்த பஸ் கட்டண உயர்வு, அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு. தாங்கள் உல்லாசமாக வாழ வாங்கிய கடனை மக்களின் மீது சுமத்தி திட்டமிட்டு ஓட்டாண்டியாக்கியுள்ளனர்!

இந்த அநியாய விலைவாசி ஏற்றத்திற்கு எதிராகக் குரல் கொடுப்போம்!

*– கல்பனா*

---

***தற்போதைய பஸ் கட்டண உயர்வுக்குப் பின்னரும் எஞ்சி இருக்கும் ரூ. 170 கோடி கடனை எப்படி அடைப்பது என்றுத் தெரியாமலுள்ள தமிழக அரசு, இன்னும் கொஞ்ச நாட்களில் போக்குவரத்தை அரசு ஏற்று நடத்த முடியாது; போக்குவரத்தை நிர்வகிப்பதற்கான பணம் அரசிடம் இல்லை, என்று தனியாருக்கு தாரை வார்த்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை***

---



படிப்பகம்

www.padippakam.com

# பழைய சீனாவின் தேசிய பெண்கள் காங்கிரஸும் - என் நினைவுகளும்



- லுஃபாங்

(இருபது வயதில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட லுஃபாங், பெண்கள் மற்றும் இளைஞர் சங்கங்களில் செயலூக்கத்துடன் வேலை செய்தவர். 1946-48 காலக் கட்டத்தில் ஷாங்காய் பெண்கள் அமைப்பில் வேலை செய்தவர். 1949க்கு பின் அகில சீன பெண்கள் கூட்டமைப்பின் நிர்வாக உறுப்பினராக வேலை செய்தார். தற்பொழுது, அதாவது தனது 66 வயதில் ''விமன் ஆப் சீனா'' என்ற ஆங்கில பத்திரிக்கையின் ஆசிரியராக பொறுப்பேற்று வேலை செய்து வருகிறார்.)

1949-காலக்கட்டத்தில் சீன மக்கள் தங்களுடைய விடுதலைப் பாதையில் பெரும் வெற்றியை அடைந்திருந்தனர். மக்கள் விடுதலை இராணுவத்தின் தாக்குதலுக்கும் முன்பே கோமிங்டாங் (ஷியாங்கே ஷேக் தலைமையிலிருந்த சீனா அரசு) சேனைகள் தாக்குபிடிக்க முடியவில்லை. இக்கால கட்டத்தில் ஷியாங்கே ஷேக்கின் அதிகாரம் இறுதிக்கட்டத்தை சென்றடைந்தது. ஏறத்தாழ 30 வருடங்கள் சீனக் கம்யூனிஸக் கட்சியின் தலைமையின் கீழ் சீன மக்கள் ஏகாதிபத்தியம், முதலாளித்துவ முறை மற்றும் நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடினர். நாடு முழுவதும் வெற்றி கிட்டியது என்ற உண்மை மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

அந்த வருடமே பீகிங் விடுதலையான இரண்டு மாதங்களில், அதாவது மார்ச் - 24 அன்று, தேசிய பெண்கள் காங்கிரஸின் முதல் மாநாடு பீகிங்கில் நடைபெற்றது. கோமிங்டாங் ஆக்கிரமிப்பு பகுதிகளிலுள்ள பெண்கள் சங்கங்கள் அனைத்தையும் விடுத்து, முற்போக்கு கருத்துக்கள் கொண்ட புகழ்வாய்ந்த பெண்கள் அமைப்பின் சார்பாக என்னை அக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சீன பெண்கள் அமைப்பின் செயலாளர் லீடிக் வானியிடமிருந்து தகவல் வந்தது.

நான் உடனே கிளம்பினேன். புதியதாக விடுதலை ஆன தியான் ஜின் வழியாக பயணம் செய்து பிங்சான் மாவட்டத்தை சென்றடைந்தேன். இப்பகுதி முன்பு ஹபி மாநிலத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் மையக் குழுவிற்கு மைய அலுவலகமாக இருந்தது. இந்த தேசியப் பெண்கள் காங்கிரஸின் நிர்வாக அலுவலகம் கூட அங்கு தான் இருந்தது.

எத்தனையோ நாட்களாக கனவு கண்ட அந்த விடுதலை பிரதேசத்தை சென்றடைந்தவுடன் என் வீட்டுக்கு சென்றதை போல் இருந்தது. தோழர்கள் என்னை பாசத்துடன் வரவேற்று எனக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர். அங்குள்ள பெண்கள் அனைவரும் சாம்பல் நிற சீருடையுடன் நடமாடிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்ததை பார்க்கையில், ஷாங்காயின் அப்போதைய நாகரீக உடையான சீன கவுனை அணிந்து கொண்டிருந்த எனக்கு கஷ்டமாக இருந்தது. நான் கஷ்டப்பட்டு ''எனக்கு அதே போன்ற சீருடை கிடைக்குமா'' என்று கேட்டேன். விடிந்த பிறகு அவர்கள் கொடுத்த சீருடையை அணிந்த போது சுறுசுறுப்பான எண்ணத்துடன் அழகாகவும் தோற்றமளித்தேன்.

பிறகு, அந்த கூட்டத்துக்கான வேலை செய்யும் நிர்வாகக் குழு தோழர்களை சந்தித்தேன். தேசிய பெண்கள் காங்கிரஸ் அதன் பகுதியாக அகில சீன ஜனநாயக பெண்கள் கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமென கட்சியின் மையக்குழுவின் அரசியல் பிரிவு, 1949 ஆம் ஆண்டே முடிவெடுத்தது என்பதை இங்கு வந்து தான் தெரிந்துக் கொண்டேன். சீன தலைவர் மாவோவோ, கட்சியோ பெண்கள் இயக்கத்திற்கு ஏன் இத்துணை முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்பதை அப்பொழுது என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. எது எப்படியாயின், சுதந்திர பிஜிங்கில் நடக்கின்ற முதல் தேசியக் கூட்டம், பெண்கள் கூட்டமாக இருப்பதை பெருமையாக நினைக்கின்றேன். இந்த வரலாற்று சிறப்புமிக்க கூட்டத்தில் நான் பங்கெடுப்பதை என்னால் மறக்க முடியாது.

ஜப்பான் எதிர்ப்பு யுத்தம் தொடங்குவதற்கு ஒரு வருடத்திற்கு முன் அதாவது 1936ல் விட்டு வந்த பின் இப்பொழுது தான் பிஜிங்கிற்கு செல்கின்றேன். எங்கள் தோழர்களுடன் சேர்ந்து மார்ச் மாத இடையிலேயே பிஜிங்கை சென்றடைந்தோம்.

அத்தெருக்களில் நடக்கும் போது காற்றில் வந்த ரொட்டிகள் தயாரிக்கும் இனிய வாடை என்னுடைய குழந்தைப் பருவத்தை நினைவூட்டியது. ஆனால், நான் அப்பொழுதிருந்த சூழ்நிலையில் பிஜிங்கிற்கு திரும்பி வந்து விட்டேன் என்ற விசயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை. மாறாக, நாங்கள் யுத்தத்தில் வெற்றியடைந்து விட்டோம் என்பதை நினைக்கையில் மிகவும் மகிழச்சியாக இருந்தது.

தேசிய மாநாட்டிற்கு வந்த பிரதிநிதிகளின் பெயர் பதிவு செய்யும் இடத்தில் என்னுடைய பெயரை பதிவு செய்ய சென்ற போது என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. அங்கிருந்த அனைவரும் என்னுடன் ஒரே பள்ளியில் படித்தவர்கள். அவர்கள் அனைவரும் விடுதலைப் பகுதியிலிருந்து வந்தவர்கள்தான். பத்து வருடங்கள் எங்கெங்கோ இருந்துவிட்டு - மீண்டும் விடுதலையான எங்கள் பழைய நகரத்தில் நாங்கள் அனைவரும் சேர்ந்து வெற்றி விழாவை கொண்டாடப்போகிறோம். ஆஹா... என்ன ஆச்சரியம்! என்று ஒவ்வொருவரும் அணைத்துக்கொண்டு கை கொடுத்து மகிழ்ச்சி அடைந்தோம். முதலில் எங்கு தொடங்கி என்ன பேசுவதென்றே தெரியாத அளவிற்கு மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தோம். கோமிங்டாங் பகுதிகளில் பிரதிநிதிகளின் தங்குமிடத்திற்கு என்னை அழைத்து சென்றனர். எங்கள் பழைய தோழர்களையும், எங்கள் அமைப்பின் தலைவர்களான லி டிக்வான், க்லுவாக் ஷி வியாங் ஆகியோரை நான் இங்கு தான் சந்தித்தேன். பல விதமான ஜனநாயக அமைப்புகளும், மத அமைப்புகளும், தொழிற்சாலை தொழிலாளர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும், பெண்கள் பிரதிநிதிகள் அனைவரையும் சேர்த்து 134 நபர்கள் இம்மாநாட்டிற்கு வந்திருந்தனர். கல்லூரி ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வியாபாரிகள், கலை இலக்கிய கலைஞர்கள் போன்ற பிரிவிலிருந்து சிறப்பு பிரதிநிதிகளாக 35 நபர்கள் கலந்து கொண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

இத்தனை நாட்களாக கோமிங்டாங், மக்களுக்கு துரோகம் விளைவித்த அரசாங்கம், சீன நாட்டின் உரிமையை அமெரிக்க ஏகாபத்தியங்களிடம் அடகுவைத்து சீன மக்களை ஒடுக்கியது. கோமிங்டாங், அரசின் செல்வாக்குள்ள பகுதிகளில் மக்கள் நாரடிக்கும் அரசியலாலும், பொருளாதார நெருக்கடியுடன் விண்ணை முட்டும் விலைவாசியால் பல துன்பங்களை அனுபவித்தனர். கம்யூனிஸக் கட்சியின் தலைமையில் அனைத்து வர்க்கங்களை சார்ந்த ஆயிரகணக்கான மக்கள் ஏகாதிபத்திய சுரண்டலை எதிர்த்து கோமிங்டாங்கை எதிர்த்து கிளர்ந்தெழுந்தனர். நான் ஷாங்காயிலிருந்து கிளம்புவதற்கு முன்பே அங்கிருந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்களுடைய சங்கத்தின் சார்பாக ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தினர்.

**''எங்களுக்கு விடுதலை வேண்டும்:<br>ஜனநாயம் வேண்டும்<br>எங்களுக்கு சோறு வேண்டும்:<br>பசி வேண்டாம்.''**

என்பதே அந்த தொழிலாளர், மாணவ, பெண்கள் இயக்கத்தின் முழக்கமாக இருந்தது. கோமிங்டாங் அதிகாரத்திலுள்ள பகுதிகளில் ராணுவம் வேகமாக செல்கின்றது ; சீன மக்கள் இராணுவம் வெற்றியடைகின்றது என்ற செய்திகள் இங்குள்ள மக்கள் இயக்கங்களை உற்சாகமூட்டின. இந்த இயக்கங்கள் இராணுவ போராட்டத்திற்கு பலமான ஆதரவைக் கொடுத்து கோமிங்டாங் இராணுவத்தை முழுக்க தனிமைப்படுத்த உதவுகின்றது.

சீனாவிலுள்ள ஆறு விடுதலை பிரதேசங்களிலிருந்து இக்கூட்டத்திற்கு 350 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களில், மக்கள் விடுதலை இராணுவ வீரர்கள், உற்சாகமூட்டும் தொழிலாளிகள், விவசாயிகள், அப்பகுதியிலுள்ள ஜனநாயக அரசு பிரதிநிதிகள், பெண் புரட்சியாளர்கள் ஆகியோர் உள்ளடங்குவர். அவர்களின் வாழ்க்கையைப் போலவே அவர்கள் நடந்துக் கொள்ளும் விதமும் நேர்மையாகவும், ஆடம்பரமில்லாமல், தோழமைரீதியாகவும் இருந்தது. இதற்கு முன்பு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படித்தவர்களும் கூட உழைக்கும் பெண்கள் போலவே இருக்கின்றனர். அடிப்படை வர்க்க மக்களுடன் இணைந்து வேலை செய்யவேண்டிய தேவை . அவர்களை அம்மக்களுடன் ஐக்கியப்படுத்தியுள்ளது என்பது தான் உண்மை. அம்மக்கள் பிரதிநிதிகளை நேசிக்காமல் என்னால் இருக்க முடியவில்லை.

ஒரு நாள் நடுத்தர வயதுப் பெண்கள் 20 பேர் மண்டபத்தின் முன் பகுதியில் புகைப்படத்திற்காக நின்றுக் கொண்டிருந்ததை பார்க்க நேர்ந்தது. ஆஹா... அற்புதமான காட்சி! விடுதலை பிரதேசத்திலிருந்து வந்த இவர்கள் அனைவரும் கிட்டதட்ட 20 வயதில் புரட்சிக்கு வந்தவர்கள். அவர்களில் காய் சாங், டெங்கிங் ஹலோ, இருவரும் அதற்கு பிறகு அகில சீன ஜனநாயகப் பெண்கள் கூட்டமைப்பின் செயலாளராகவும், தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல போராட்ட சரித்திரம் படைத்த இப்புரட்சிகர பெண்கள் சீன பெண்களுக்கு முன்னுதாரணமாக இருந்தனர். அவர்களின் மீதான என்னுடைய மதிப்பு மேலும் அதிகரித்தது.

நான் 1930லிருந்து தான் கோமிங்டானை எதிர்த்து புரட்சிகர நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வருகின்றேன். ஆகையால் தான் இவ்விடுதலை பகுதிகளில் பெண்கள்


படிப்பகம்

www.padippakam.com
போராட்டங்களை பற்றி எனக்கு தெரிந்தது குறைவுதான். டெங் இங் சாவோவும் மற்ற பிரதிநிதிகளின் அறிக்கைகளை பார்க்கும் பொழுது புரட்சி நடக்கும்போது புரட்சியாளர்களுக்கு ஓய்வு பகுதியை ஏற்பாடு செய்வதிலும், யுத்த காலத்திலும் பெண்கள் நிர்வகித்த அற்புதமான பங்கை புரிந்து கொள்ள முடிந்தது. அந்த அறிக்கை என்னை மிகவும் உற்சாகமூட்டியது. இதை கேட்டு சில நேரம் என் கண்களும் கலங்கியது.

விடுதலை யுத்தம் நடக்கின்ற போது துப்பாக்கி சூட்டிற்கு இடையேயும் ஆண்களுடன் சேர்ந்து, மருத்துவ உதவி செய்யும் குழுவிலுள்ள பெண்கள் யுத்தப் பகுதிக்கு சென்று அடிபட்டவர்களுக்கு சேவை செய்துள்ளனர். இராணுவத்துடன் சென்று நோயாளிகளைக் கொண்டு செல்லும் சாதனம் (ஸ்டெர்ட்சர்) கிடைக்காத நேரத்தில், இராணுவத்துடன் சேர்ந்து காயப்பட்ட இராணுவ வீரர்களை மருத்துவ வசதி இருக்கின்ற பகுதிக்கு தாங்களே தூக்கி கொண்டு வந்தார்கள். வட சீனாவை சார்ந்த லிலாண்டிங் என்பவரும் அப்படிப்பட்ட ஒரு இராணுவ மருத்துவ குழுவிற்கு தலைமை வகித்தார். சிறியவராக எளிமையாக இருந்த அவர், எதிரி துப்பாக்கி சூடு நடத்தி கொண்டிருந்த போது, அடிபட்ட தோழரை தோளில் தாங்கிக்கொண்டு அவரை தப்பிக்க வைத்தார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ஒருமுறை அவர்களின் குழு யுத்த பகுதியிலிருந்து 500 வீரர்களைக் காப்பாற்றியதாம்! இடைவிடா மழையிலும் மண் குழியிலும், மழைத்தண்ணீரில் நனைந்த படியே ஒரு மாதத்திற்கு மேலாகப் போராடி அந்த மருத்துவக் குழு காயப்பட்டவர்களைப் பாதுகாப்பான இடத்தில் சேர்த்தது.

சியாங் கே ஷேக் இராணுவம், அமெரிக்காவின் ஆதரவை நாடியிருக்கும் போது, மக்கள் விடுதலை இராணுவம் அவர்களின் தேவையை மக்கள் விடுதலை பிரதேசத்திலுள்ள மக்களை சார்ந்தே பூர்த்தி செய்துக் கொண்டது. அச்சூழலில், பெண்கள் தங்களுடைய பணியை பூர்த்தி செய்தனர், அதாவது, துணி நெய்து, சீருடை, பூட்ஸ் தயார் செய்து போர் வீரர்களுக்கு அனுப்பி வைத்தனர். இரண்டரை ஆண்டு காலத்தில் 5 கோடி ஜோடிகள் பூட்ஸ்களை செய்தனர். 1947ல் தாய் ஹாங் மலைப்பகுதியை சார்ந்த 7,00,000 பெண்கள் 100 நாட்களில் நெசவு நிகழ்ச்சியை நிர்வகித்து 5,06,00,000 சதுர அடி துணியை தயார் செய்தனர், இது இராணுவத்திற்கு மட்டுல்லாமல் அப்பகுதி மக்களின் தேவைக்கு கூட போதுமானதாக இருந்தது. இராணுவம் அவர்களின் பகுதியிலிருந்த போது, அவர்களுக்கு உணவு ஏற்பாட்டை பெண்களே செய்தனர். சிறு சிறு ஊர்களிலும் ஒரு நாளில் 1500 கிலோ மாவு இடித்து இராணுவ வீரர்களுக்கு கொடுப்பார்கள்.

ஆண்கள், யுத்த பகுதிக்கோ அல்லது மற்ற வேலைகளுக்கோ செல்லும்போது விவசாய வேலைகளையும் பெண்களே பார்த்துக்கொண்டனர். 1948ல் ஷாங்கி - அயின் விடுதலைப் பகுதியில் 50 % மேலான கிராமப் பெண்கள் வருடம் முழுவதும் வயற்காட்டில் வேலை செய்தனர். ஏர் உழுவது, நாற்று நடுவது, அறுவடை செய்வது போன்ற அனைத்து வேலைகளையும் பெண்கள் சரியான காலக்கட்டத்தில் செய்தனர். வடகிழக்கு விடுதலைப் பகுதியிலும் அவ்வருடம் சுமார் 30,00,000 பெண்கள் வயல்காட்டில் வேலை செய்தனர்.

வடகிழக்கு பகுதியிலுருந்து வந்த பிரதிநிதிகளில், சீனாவில் முதல் முதல் ட்ராக்டர் ஒட்டுநர் லியாங் ஜுன் என்பவராவார். ஹிலாங் ஜிஸாப் மாநிலத்திலுள்ள டெடு பகுதியில்


படிப்பகம்

www.padippakam.com

கட்சி வட்டாரக் குழு நடத்திய ட்ராக்டர் ஓட்டுநர் பயிற்சிக்கு வந்த 70 மாணவர்களில் இவர் ஒருவர் தான் பெண்! அங்கிருந்த ஆசிரியர்க்கோ பெண்களால் ட்ராக்டர் எப்படி ஓட்ட முடியும் என்ற சந்தேகம் வந்தது. இருந்தாலும் அதை நிர்வகிக்கும் அதிகாரியோ ஜுனை உற்சாகமூட்டினார். குறுகிய காலத்தில் ஆண்களுக்கு சமமாக திறமையுடன் ஓட்டிக் காண்பித்தார் ஜுன். பிறகு, அவரிடம் பயிற்சி எடுத்த ட்ராக்டர் ஓட்டுநர் பலர் தற்போது சீன விவசாயத்தை நவீனமயமாக்குவதில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர்.

ஜியாங் சு மாநிலத்திலுள்ள தாய் சிங் மாவட்டத்தை சார்ந்த மற்றொரு பிரதிநிதியான லுயூ ஹீசெல் ஆயுதப் போராட்ட க் குழுவின் தலைவர் 'கமாண்டர் லுயு' தலைமையிலான தளம் அடிக்கடிஎதிரி முகாமில் தாக்குதல் நடத்தி அரிசியையும், சாக்குகளையும் கொண்டு வந்து கொடுப்பார்கள். கைதிகளை விடுவிப்பார்கள். மக்கள் எதிரியிடம் சிக்காமலிருக்க அரிசியையும், உணவையும் மறைத்து வைக்க உதவுவார்கள்.

டெங்-இங்-சாவோ தன்னுடைய அறிக்கையில் -போராட்டங்களில் பெண்களின் பங்கை பற்றி மிகவும் அருமையான வார்த்தைகளில் எங்களுக்குக் கூறினார். 2500 வருடங்களுக்கு மேலாக, விடுதலைக்காக நடத்திய மக்கள் யுத்தத்தில் பெண்கள் தளர இயலாத வீரத்துடன் போராட்டத்திற்கு பெரும் ஆதரவைக் கொடுத்தனர் என்று கூறினார்.

இப்படி அக்கூட்டத்தில் பங்கெடுக்கும் போது, நாடு முழுவதும் வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கும் அச்சூழலில் நடக்கின்ற இந்த காங்கிரஸ் உண்மையில் கோமிங்டாங் அதிகாரத்திலுள்ள, விடுதலை பகுதியிலுள்ள முற்போக்குப் பெண்கள் அனைவரையும் ஒன்றுப்படுத்தி சீன பெண்களின் ஒற்றுமைக்கு சின்னமாக அமைந்தது என்று தான் தோன்றியது. கட்சி மையக் குழு இந்த காங்கிரஸை ஏன் நிர்வகித்தது என்பது அப்பொழுதான் எனக்குப் புரிந்தது.

அனைத்துக் துறைகளுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் 72 பேர் கொண்ட செயற்குழு நியமிக்கப்பட்டது.புதுமையாக வளர்நதுவரும் அகில சீன ஜனநாயகப் பெண்கள் கூட்டமைப்பிற்கு சியாங் ஜிங் கவுரவ செயலாளராகவும், காய் சாங் செயலாளராகவும், டெங்-சிங்-சாவோ, லிபுக்வான் சுகுவாங் புங் துணை செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். சீனா முழுவதும் விடுதலை ஆகும் வரை தேசிய ஜனநாயகப் புரட்சியை தொடர்ச்சியாக கொண்டு செல்லக்கோரியும், விடுதலை யுத்தத்திற்கு ஆதரவு கொடுக்குமாறும் இக்கூட்டம் அறைகூவி அழைத்தது. தொழிலாளப் பெண்களையும், கை தொழில் செய்யும் பெண்களையும், அனைத்துத் துறைகளிலும் உள்ளப் பெண்களையும் புதிய சீனத்தை கட்டமைக்க ஆண்களுடன் சேர்ந்து உற்பத்தியிலும், கல்வியிலும் பங்கெடுக்குமாறு அறைகூவல் விடுத்தது.

ஏப்ரல் - 3 அன்று கூட்டம் வெற்றிகரமாக முடிந்த 15 நாட்களுக்குப் பின் தலைவர் மாவோ, ஜெனரல் சூட்டே ஆகியோர் நாடு முழுவதும் எதிரியைத்தாக்கக்கோரி சீன மக்களுக்கு அறைகூவல் விட்டனர். மக்கள் விடுதலை இராணுவம் சாங் சியாங் நதி (யாங்சி நதி) வழியாக வீரமாகப் போராடி கோமிங்டாங் அரசை வீழ்த்தியது. மாநாட்டில் பங்கெடுத்தப் பெண்கள் தற்போது கூட்டம், தங்களுக்குக் கொடுத்த பொறுப்பை நிறைவேற்றத் தயாராயினர்.

*- மகிளா மார்க்கம் வெளியிட்ட 'விப்ளவோ ப்ரயம்வோ' என்ற புத்தகத்தின் தெலுங்கு மொழியாக்கம்*




படிப்பகம்

www.padippakam.com

# வீரம் செறிந்த சாராய எதிர்ப்புப் போர்:—

கேரள மாநிலம் - காசர்கோடு மாவட்டத்திலுள்ள மீனவர்கள் நிறைந்த நெல்லிக்குன்னு கிராமத்தின் பல குடும்பங்களில் குடி குடியைக் கெடுத்தது. கணவன் வருவாயையெல்லாம் குடித்துவிட்டு மனைவியை அடிப்பது தினசரி சம்பவமானது. பெண்களின் கண்கள் எப்பொழுதும் கண்ணீர் மாலையானது.

மிதிபட மிதிபட புழுவும் புலியாகாதா? பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் ஒன்று கூடி, இந்தக் கொடுமைக்கு முடிவுகாண குமுறினார்கள், கள்ளச்சாரய உற்பத்தியாளரிடமும், காவல்துறையிடமும் புகார் கொடுத்தும் எவ்வித பயனும் இல்லாமல், போராட்டக் களத்தில் இறங்கினார்கள், வாழ்வா - சாவா பார்த்திடுவோம் என்று பெண்கள் ஒரு முடிவுக்கு வந்தனர்.



சாராய எதிர்ப்பு போர் நடத்தும் நெல்லிக்குன்னு கிராம பெண்கள்

கரண்டி ஏந்திய கைகளில் கம்பு வந்தது! தண்ணீர் பானைகளைத் தாங்கி வந்தவர்களின் கைகளில் தடியும் வந்தது! குழந்தைகளைத் தூக்கி கொஞ்சிய கைகளில் பட்டாக்கத்தியும் வந்தது! அமைதியானவர்கள் என்று பெயரெடுத்த - வர்களின் கைகளில் அரிவாளும் வந்தது!

கள்ளச்சாராயம் காய்ச்சும் இடங்களை நோக்கி அணி வகுத்தார்கள் பெண்கள்! அடிதான்! ஆம்! அடிதான்! சாராயம் காய்ச்சிய ஆண்களும், சாராயம் குடித்துக் கொண்டிருந்தவர்களும் தாக்கப்பட்டனர். சாராயம் காய்ச்சத் துணைப் புரிந்த பெண்களும் உதைப்பட்டார்கள். சாராயப் பானைகள் உடைபட்டன. சாராயம் ஆறாய் ஓடியது. சாலைகளில் வந்த பேருந்துகளை வழி மறித்தார்கள். சாராயம் கடத்தப்படுகிறதா என்று கண்காணித்தார்கள். சாராயம் அதில் இருந்தால் உடைத்து சாலைகளில் ஓடவிட்டார்கள்.

நெல்லிக்குன்னு கிராமமே கலகலத்தது. நடுநடுங்கியது. சாராயத்தால் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு நெல்லிக்குன்னு கிராமப் பெண்களின் இந்த வீரம் செறிந்த போராட்டம் ஒரு முன்மாதிரியில்லையா?

*– நன்றி 'உண்மை'*

## 'உலகின் கற்பழிப்பு தலைநகரம்'

தென் ஆப்பிரிக்காவில் ஒவ்வொரு 26 நிமிடத்திற்கும் ஒரு பெண் பாலியல் வன்முறை செய்யப்படுகிறாள். ஒவ்வொரு மூன்று பெண்களுக்கு ஒரு பெண் பாலியல் வன்முறை செய்யப்படுகிறாள். உலகிலேயே அதிகமான பாலியல் வன்முறை சம்பவங்கள் இங்கு தான் நடப்பதால், தென் ஆப்பிரிக்காவை 'உலகின் கற்பழிப்பு தலைநகரம்' என்றுக் கூறுவது ஏதுவாகும்.

*– ஆதாரம் 'தி இந்து'*


படிப்பகம்

www.padippakam.com

## காம்ரேட் - நூல் அறிமுகம்

''காம்ரேட்'' என்ற வரலாற்று நவீனம் இந்திய சுதந்திரத்திற்காகத் தூக்கு மேடையை முத்தமிட்ட தோழர் பகத்சிங்கின் சக தோழரான யஷ்பால் என்பரால் எழுதப்பட்டு வி.கே. பாலகிருஷ்ணன் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்று நவீனம் மூன்றாவது முறையாக தமிழில் பதிப்பு செய்யப்பட்டு ''அலைகள் அச்சகத்தால்'' வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய ''சுதந்திரத்தின்'' ஐம்பதாண்டு பொன்விழாவை பெரும் கூச்சலுடன் ஆளும் வர்க்கம் கொண்டாடி விட்டு ஓய்ந்திருக்கும் வேலையில் மூன்றாவது பதிப்பை நோக்கி வீறுநடை போட்டு வரும் நாவல் தான் ''காம்ரேட்''! 1964 ஆம் ஆண்டு நடந்த வீரம் செறிந்த கப்பற்படை எழுச்சியை கண்முன்னால் இந்த நாவல் கொண்டு வந்து நிறுத்துகிறது. அதுமட்டுமல்லாமல் காங்கிரஸின் துரோக வரலாற்றையும், கம்யூனிஸ்டுகளின் வீரம் செறிந்த மகத்தான தியாகத்தையும் பறைசாற்ற இந்த சிறு நாவலே போதுமானது! கொந்தளிப்பான போராட்ட எழுச்சியில் நடுத்தர வர்க்க அறிவு ஜீவியையும் (கீதா) மற்றும் மனிதாபிமானமிக்க மற்றொருவரையும் (பாவரியா) உள்ளடக்கிய இரு பாத்திரப் படைப்புகளின் மூலம் அக்காலகட்ட நிகழ்ச்சிகளை சுவையாக இந்நாவல் எடுத்துரைக்கின்றது.

### நாவலின் சுருக்கம்:

மும்பாயில் ஆராய்ச்சியாளரான கீதா கம்யூனிசத் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு கம்யூனிஸக் கட்சியில் சேர்கிறாள். பாட்டாளி வர்க்க சிந்தனையைத் தூக்கிப்பிடிக்கும் கம்யூனிஸக் கட்சிக்குள் தன்னுடைய மாற்று வர்க்க குணாம்சங்களை படிப்படியாக எப்படி மாற்றிக் கொள்கிறாள் என்பதை பற்றிய பல சித்தரிப்புகளை இந்நாவல் விளக்குகிறது. மேலும், ஒரு பெண் போராளி சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விளக்குகிறது. கம்யூனிஸக் கட்சி பெண் போராளிகளை எப்படியெல்லாம் பயிற்றுவிக்கிறது என்பதையும் விளக்குகிறது.

பாவரியா என்ற தானிய வியாபாரி அனைத்து அயோக்கியத்தனமும் நிறைந்தவன். பல சமயங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்கு அடியாட்களாக செயல்படுபவன். கம்யூனிஸக் கட்சி பத்திரிக்கையான ''பீப்புள்ஸ் ஏஜ்'' என்றப் பத்திரிக்கையை கீதா விற்பனை செய்து கொண்டிருக்கையில் அவளை கலாட்டா செய்யும் நோக்கில் பத்திரிக்கையை வாங்குகிறான். பின், எப்படியாவது அவளை அடைய வேண்டும் என்ற நோக்கில் அவளுடன் பழகுகின்றான். கீதா, அவனது உண்மையான நோக்கத்தை புரிந்துக் கொள்ளாமல், அவனை கம்யூனிஸக் கட்சிக்குள் சேர்க்கும் நோக்கத்துடன் அவனுக்கு புத்தகங்களை விற்பதும், அவனிடம் அரசியல் விவாதங்கள் செய்வதும், நன்கொடை வசூலிப்பது என்று அவனிடம் பழகி வருகின்றாள். ஆனால் கட்சித் தோழர்கள் அவனின் குணாம்சங்களைக் கூறி கீதாவை எச்சரித்தனர். இதற்கிடையே, பாவரியா கீதாவை ஆபாசமான மதுபான கிளப்புக்கு ஏமாற்றி அழைத்து சென்றான். இதனால் கீதா கோபமிகுந்த எரிச்சலுடன், ''எதற்காக நீங்கள் என்னை இங்கு அழைத்து வந்தீர்கள்...? இது ஒழுக்கமுள்ளவர்கள் வரக்கூடிய இடமா...? நான் உங்களை


படிப்பகம்

www.padippakam.com

இப்படி நினைக்கவேயில்லை''என்று அழுகையை அடக்கிக் கொண்டு 'போகலாம்' என்றாள்.

கீதாவின் இந்த செயல்பாடு பவாரியாவிடம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவனுடைய பல நாள் பழக்கங்கள் மெல்ல மெல்ல இழைப் பிரிந்து வந்தது. கடைக்கு போய் வெகு நேரம் வியாபாரத்தை கவனித்தான். மற்ற நேரங்களில் கீதா கொடுத்த புத்தகங்களை படித்துக் கொண்டிருந்தான். அவன் கம்யூனிஸப் புத்தகங்களை தேடி பிடித்துக் கூட படிக்க ஆரம்பித்தான். காங்கிரஸுக்கும் கம்யூனிஸத்திற்கும் உள்ள முரண்பாடுகள் அவனுக்குத் தெரிய வந்தது.

ஒரு நாள் கீதாவும், கட்சித் தோழரும் கட்சிப் பத்திரிக்கையை விற்றுக் கொண்டிருக்கையில் காங்கிரஸ் ரௌடிகள் கீதாவை கொச்சையான வார்த்தைகளில் ஏசினர். இதை தற்செயலாக பார்க்க நேர்ந்த பாவரியா இந்த முரடனை அடித்ததால் இருவருக்குமிடையே சண்டை நடந்தது. ''பத்திரிக்கை விற்கும் கம்யூனிஸ்ட் இளம் பெண் கீதாவிற்காக குண்டர்களிடையே கைகலப்பு!'' என்று கொச்சையாக காங்கிரஸ் பத்திரிக்கை இந்நிகழ்ச்சியை சித்தரித்தது. இந்த அவதூறு பிரச்சாரத்தால் கீதா வீட்டை விட்டு வெளியில் வந்து கட்சிப் பணி தொடர தடையாய் நின்றது. மறுபுறம், பாவரியா காங்கிரஸ் பத்திரிக்கைகள் மீது வெறுப்பு அடைய ஆரம்பித்தான்.

பத்திரிக்கையில் வந்த செய்தியை ஒட்டி கட்சியின் மாநிலக்குழு விசாரணை நடத்திவிட்டு, ஏற்கனவே பாவரியாவைப் பற்றி கட்சி எச்சரித்ததை மீறி அவனுடன் பழகியதையும், பாவரியா கீதாவை ஏமாற்றி மது கடைக்குள் அழைத்து சென்றது போன்ற விசயங்களை கட்சிக்குத் தெரிவிக்காமல் மறைத்ததையும் கருத்தில் கொண்டு கீதாவை கட்சி பொறுப்புகளிலிருந்து தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு நீக்கம் செய்தது.

பாவரியா கீதாவிடம் மன்னிப்பு கேட்க முயல்கின்றான். ஆனால், அத்தருணத்தில் கப்பற்படை வீரர்கள் ஆங்கில ஆட்சிக்கெதிரான பெரும் எழுச்சியை செய்தனர். அவர்களுக்கு ஆதரவாக கம்யூனிஸ்டுகளும் களத்தில் இறங்கினர். கப்பல் படை வீரர்களுக்கு ஆதரவாக மும்பாய் முழுதும் அர்த்தால் நடந்தது. இதை காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது. இந்திலையில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு எதிராக காங்கிரஸ்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்நேரத்தை பயன்படுத்திக் கொண்டு ஆங்கில வெறிநாய்கள் துப்பாக்கியால் பொதுமக்களையும், கம்யூனிஸ்டுகளையும் சுட்டுத் தள்ளியது. இதைக் கண்டு கொதித்தெழுந்த பாவரியா வீரத்துடன் அவர்களுடன் போராட்டக் களத்தில் இறங்கினான். அதில் குண்டு பாய்ந்து படு காயத்துடன் சாகும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அந்த நிலையில் கடைசியாக கீதாவை பார்க்க விரும்புகின்றான். ஆனால், கீதா வருவதற்குள் அவன் வீரமரணம் அடைகின்றான்.

கம்யூனிஸக் கட்சி பாவரியாவின் தியாகத்தை போற்றியது. ''பாவரியாவைப் போன்ற ஒழுக்கங்கெட்ட ஒருவனை அரசியல் போரட்டத்தில் முன்னணிக்குக் கொண்டு வந்த பெருமை கீதாவையே சேரும்'' என்று கம்யூனிஸக் கட்சி புகழ்ந்தது. பாவரியாவின் உடல் வீரவணக்கத்துடன் அடக்கம் செய்யப்பட்டது.

இது மட்டும் இல்லாமல் கம்யூனிசக் கட்சியில் பல்வேறு தோழர்களின் குணாம்சங்களை பற்றியும், காங்கிரஸ் கட்சியின் துரோகத்தனம் பற்றியும், பல பெண


படிப்பகம்

www.padippakam.com

போராளி குணாதிசயங்களை பற்றியும், கம்யூனிசக் கட்சிக்குள் நடக்கும் உள் போராட்டங்களையும் இந்த நாவல் குறிப்பிடுகிறது.

பெண் போராளிப் பற்றி சித்தரிக்கும் இந்த நாவலை பெண்கள் படித்து தெரிந்துக் கொள்வது அவசியம்.

***இந்த நூல் விற்பனை செய்யுமிடம் :***

***அலைகள் வெளியீட்டகம், கீழைக்காற்று.***

***"காம்ரெட்" புத்தகத்தின் விலை - 20 ரூபாய்.*** ***- எம்.எஸ்.கலா.***

---

# எதிரொலிப்பு

இராமசந்திரா ஆஸ்பத்திரி என்றால் பேரும் புகழும் உண்டு ஆனால் உள்ளுக்குள் உள்ள நாற்றம், அங்கு செல்லும் நோயாளிகளுக்குத்தான் தெரியும். ஒரு சின்ன நோயைக் கூட பெரிதுபடுத்திப் பார்க்கிறார்கள். பெண் உரிமை வாசகர்களே! என் அனுபவத்தை கூறுகிறேன் கேளுங்கள்!

எனக்கு அப்பன்டிக்ஸ் ஆபரேசன் என்று கூறி அவர்கள் படுத்திய பாட்டை என்னால் மறக்க முடியாது. அப்பன்டிக்ஸ் ஆபரேசன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். ஆனால் அங்கு ஆபரேஷன் செய்வதில்லை, மாறாக அங்கு மேல் படிப்பு படிக்க வரும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், அவர்களுக்கு தொழில் கற்றுக் கொள்ளும் இடமாக நோயாளிகளை பயன்படுத்துகிறார்கள் அது மட்டுமில்லாமல், நோயாளிகளை ஆபரேசன் வார்ட்டுக்கு கூட்டிச் செல்லும் போது வார்ட் பாய்கள் தவறாக நடந்துக் கொள்கிறார்கள். எனக்கும் அப்பன்டிக்ஸ் ஆபரேசன் நடந்தது. மயக்கத்தில் நான், என்னை மறந்த நிலையில் இருக்கும் போது வார்ட் பாய்கள் என்னை ஆபரேசன் தியேட்டரிலிருந்து கூட்டி வந்தார்கள். வார்ட்டுக்கு கூட்டிச் செல்லும் முன் என்னிடம் தவறாக நடந்து கொண்டார்கள். அதாவது அப்பொழுது எனக்கு 1¼ வயதில் ஒரு குழந்தை இருந்தது. அந்த நிலையில் என் மார்பகத்தின் மீது அவன் கைப்படர்ந்தது அதை என்னால் நன்கு உணர முடிந்தது. ஆனால் தடுக்க முடியவில்லை. காரணம், ஒரு கையில் குளுக்கோஸ் ஏறிக் கொண்டு இருந்ததால், அப்படியும் என் ஒரு கையால் தடுக்க முயன்று தோற்றுப் போனதுதான் மிச்சம். அந்த நிலையில் என்னால் எதுவும் செய்ய முடியாமல் போனது.

வார்ட் பாய்கள் பெண் நோயாளிகள் என்றால் தவறாக நடந்து கொள்கிறார்கள். மயக்கத்தில் இருக்கும் பெண் நோயளிகளால் அதைத் தடுக்க முடிவதில்லை. அச்சமயத்தில் வேறு, நர்ஸ்களோ அல்லது பெண் வேலையாட்களோ இருக்ககூடாது. இத்தகைய இன்னல்களுக்கு பல பெண்கள் அங்கு ஆளாகிறார்கள். எனக்கு ஏற்பட்ட இத்துன்பத்தைப் பற்றி யாரிடம் கூறுவது என்று எனக்கு ஒரே மன உளைச்சலாக இருந்தது. ஆனால் அந்த சம்பவத்தை, இப்பொழுது 'பெண் உரிமை' வாசகியாகிய நான் உங்களுக்கு எழுதுகிறேன். இதைக் கண்டிப்பாக 'பெண் உரிமை' புத்தகத்தில் எதிரொலிப்பு பகுதியில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***'பெண் உரிமை' வாசகி கே. கௌரி.***


படிப்பகம்

www.padippakam.com

# பெண் விடுதலைக்கான மூல வேர்கள்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

இன்றைய அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ இந்தியாவில், பிற்போக்கு குணாம்சங்களைக் கொண்ட ஏகாதிபத்தியம், இந்தியாவின் குறுக்கு நெடுக்கிலுமுள்ள பழைய நிலப்பிரபுக்களோடு பிற்போக்குக் கூட்டை ஏற்படுத்திக்கொண்டு ஆணாதிக்கத்தை நிலைக்க செய்ய அனைத்தையும் செய்து வருகின்றது. நிலவிவரும் பெண்ணடிமைத்தனத்தை பயன்படுத்தி பெண்களின் உழைப்பை குறைந்த கூலிக்கு சுரண்டி அதீத இலாபம் அடைந்து வருகின்றன. தங்களது நேரடி நிர்வாகத்திலும், தரகு முதலாளிகளின் (ஏகாபத்தியத்திற்கு வால் பிடிக்கும் முதலாளிகள்) மேற்பார்வையிலும் உள்ள எக்ஸ்போர்ட் கம்பெனி முதல் தீப்பெட்டி கம்பெனி வரை பெண் குழந்தைகளின் உழைப்பை சுரண்டி கொழுக்கின்றன. இந்தியாவில் ஏகபோக மூலதனத்தின் ஆட்சி, அபரிமித இலாபத்தைப் பெறுவதற்காக மட்டுமின்றி, தான் உருவாக்கிய பாலியல் தொழிலுக்காகவும் ஆணாதிக்கத்தைப் பேணி பாதுகாத்து வருகின்றது. அழுகிக் கொண்டிருக்கும் முதலாளிமயமாகவும், ஒட்டு மொத்த அரசியல் பிற்போக்காகவும் இருக்கும் ஏகாதிபத்தியம், மனிதத் தன்மையை சீரழிக்கும் மேலை நாட்டுப் பண்பாட்டை வளர்த்து, பாலியலை விலைக் கொடுத்து வாங்கக் கூடிய ஓர் வியாபாரமாக்கி, அதை விற்பவரை, பாலியல் விற்பனையாளராக்கி பெண்ணினத்திற்கு இழிவு தேடித் தந்துள்ளது. அடிமைக் காலத்தில் தோன்றிய விபச்சாரமும், நிலபிரபுத்துவ காலத்தில் ''தாசி''களாக பெண்களை வைத்திருந்ததையும் ஏகாதிபத்தியம் பரந்த அளவில் அங்கீகரிக்கிறது. வறுமையில் வாடும் 4 வயதுக் குழந்தை தொடங்கி, குடும்பத்திலுள்ள பசி, பட்டினியையும் வன்முறையையும் தாளாமல் வீட்டை விட்டு வெளியேறும் திருமணமாகாத இளம் பெண்கள் வரை, அனைவரையும் இந்த ஏகாதிபத்திய சுற்றுலாத்துறை தன்னுடைய வலையில் வளைத்துப் பிடித்து அதிக இலாபத்திற்கு அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துகிறது. உதாரணமாக, சமீபத்தில் கேரளத்திலிருந்து கடத்தி வரப்பட்ட நான்கு வயது சிறுமிகள் கோவளம் கடற்கரையில் வெளிநாட்டு சுற்றுலாத்துறையினரால் பாலியலுக்காக சின்னாபின்னமாக்கப்பட்டதை பத்திரிக்கைகள் விவரித்தன.

மேலும், சினிமா, டி.வி., சுவரொட்டி என்று அனைத்திலுமே பெண்ணை பாலியல் சின்னமாக சித்தரித்து கொள்ளையடித்தது மட்டுமல்லாமல், அவர்களின் கொள்ளையை மக்கள் கேட்காதவண்ணம் பாலியலின்பம் அடைவதே வாழ்க்கை என்ற கற்பனையை உருவாக்கி வருகிறது. எனவே, சீரழிந்த ஏகபோக மூலதன காலத்தில் ஆணாதிக்கத்தின் தன்மையானது பெண்களை பாலியல் பொருட்களாக முன்னிலைப்படுத்துவதே!

ஆதலால், இன்றைய காலக்கட்டத்தில், ஏற்கனவே, ஆழமாக வேரூன்றியுள்ள நிலவுடமையுடன் கைகோர்த்து கொண்டு ஏகாதிபத்திய சுரண்டலும் பெண்களை அடிமைப்படுத்துகின்றது. பெண் விடுதலை என்பது இந்த இரு பெரிய தடைகற்களை வீழத்தாமல் சாத்தியமாகாது. எனவே, இத்தடைகற்களை உடைத்தெறிந்து பெண் விடுதலை அடைய உள்ள முன் நிபந்தனைகளை பற்றி பார்ப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

***பெண் விடுதலைக்கான முன் நிபந்தனைகள் :-***

நாம் மேற்சொன்ன படி, பல்வேறு காலக் கட்டங்களில் இன்று வரை பெண் பல்வேறு கொடூரங்களுக்கு இரையாகி பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இத்தடைகள் பெண்களை சமூக வாழ்விலிருந்து முழுமையாக பங்கேற்பதை தடை செய்கின்றன. ஆனால், சமூக வாழ்க்கையில் பெண்களின் முழுமையான பங்களிப்பு ஒன்று தான் ஆணாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வரும் ; பெண்களின் முழு விடுதலையையும் உறுதியளிக்க முடியும்.

ஆதலால், பெண்களை சமூக வாழ்விலிருந்து விலக்கும் பெண் விடுதலைக்குத் தடையாய் உள்ள காரணிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

எனவே, அந்த காரணிகளை ஒவ்வொன்றாக ஆழமாகப் பார்ப்போம்!

***ஆணாதிக்கப் பண்பாடு:-***

புராதான காலத்தின் இறுதிக் கட்டம் முதல் இன்று வரை ஆழமாக வேரூன்றியுள்ள ஆணாதிக்கப்பண்பாடு பெண்களை பல்வேறு வகைகளில் தாக்கி வருகின்றது.

பெண் ஆணுக்குக் கீழானவள். ஆணுடைய உடமை. ஆணுடைய இன்பத்திற்காகப் படைக்கப்பட்டவள். சுய சிந்தனையே இல்லாத ஆணின் இணையுறுப்பாகவே பெண்ணை ஆணாதிக்க சிந்தனைக் கூறுகிறது. இந்த ஆணாதிக்கப் பண்பாட்டினால் பெண்களின் வாழ்க்கையில் எத்துணைக் கொடூரங்கள் ! அப்பப்பா! வார்த்தைகளால் விவரிக்க முடியாது!

பெண்ணாக பிறந்தவுடனே கருவிலே கொல்லப்படுபவளாய்... அதையும் மீறி இத்தரணியில் பிறந்துவிட்டால், ஆண் குழந்தை வெளியில் கிரிக்கெட்டும், ஏனைய விளையாட்டுகளும் விளையாடலாம். ஆனால் பெண் குழந்தை அம்மாவிற்கு உதவியாக பாத்திரங்கள் கழுவுதல், தம்பி, தங்கைகளை பராமரித்தல் என்று பாரபட்சமாக வளர்க்கப்படுபவளாய்... கற்பு, ஒழுக்கம் என்று பெண்ணடிமைத்தனத்தின் விஷத்தை ஊட்டப்படுபவளாய்... திருமணத்திற்கு முன் வரை தந்தையின் கட்டுப்பாட்டுக்கும், திருமணமானப்பின கணவனின் கட்டுப்பாட்டுக்கும், கணவன் இறந்தபின் மகனின் கட்டுப்பாட்டுக்கும் இரையாகி சுய சிந்தனையற்றவளாய்... குடும்ப விசயங்களிலோ, பொது விஷயங்களிலோ தலையிடுவது தடைசெய்யப்பட்டு, கணவனின் படுக்கையறைப் பாவையாக, குழந்தைகளைப் பராமரிப்பதையே கடமையாகக் கொண்டவளாய்... கோழை, உணர்ச்சிவசப்படுபவள், சாந்தமானவள், தாழ்ந்தவள், என்றெல்லாம் பட்டம் சூட்டப்படுபவளாய்... *என்று வர்க்க சமுதாயத்தின் தொடக்கம் முதற் கொண்டு இன்று வரை பெண்களின் மீது ஆணாதிக்கப்பண்பாடு திணிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பிற்போக்கு நிலவுடமை அமைப்பானது இந்த பெண்ணடிமைத்தனத்தை பேணிக் காத்து வருகின்றது. மேலும், சமீபத்தில் வளர்ந்து வரும் ஏகாதிபத்திய சுரண்டலானது இந்த ஆணாதிக்கப் பண்பாட்டைப் பயன்படுத்தி அதீத இலாபம் பெற்று இந்திய மக்களின் வயிற்றிலடிக்கின்றது.*

*திருமணம் :-*

இந்தியாவில் பெரும்பான்மையான திருமணங்கள் பெற்றோர்களால்


படிப்பகம்

www.padippakam.com

நிர்ணயிக்கப்படும் கட்டாயத் திருமணங்களே! பெண் சரியில்லை என்றோ, பெண்ணை பாட்டுபாட வைத்து, டேன்ஸ் ஆட சொல்லி தேர்வு செய்யவோ ஆணுக்குத் தான் உரிமை உண்டு... ''கன்னிகாதானம்'' என்றப் பெயரில் தந்தையின் கையிலிருந்து கணவன் பெற்றுக் கொள்ளும் உரிமையே திருமணம் என்பது! திருமணத்திற்கு பின் கணவன் மனைவியை அடிக்கலாம், கொடுமைப்படுத்தலாம். மனைவி, அப்பொழுதும் ''கணவனே கண்கண்ட தெய்வம்'' என்று இருப்பது தானே நியதி, என்கிறது சமூகம். சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் தனது ஏழேழு ஜென்மத்துக்கும் கட்டினக் கணவனை தவிர வேறு யாரையும் அவள் நினைக்கக் கூடாது. அவ்வாறு நினைத்தால் அவளை ''விபச்சாரி'' என்றுக் கூறி மறு திருமணம் செய்வதை மறுக்கின்றது.

கணவன் இறந்தவுடன் விதவை என்றுப் பட்டமளித்து அவளை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கிறது. ஆனால், மனைவி இறந்துவிட்டால் கணவன் இரண்டாவது திருமணம் செய்துக் கொள்ளலாம்.

சமீப காலங்களாக, ஏகாதிபத்தியத்தின் தாக்குதலால் திருமணம் வியாபாரமாக்கப்பட்டுள்ளது. இந்த வியாபாரத்திலும் ஆணுக்கு தான் மார்க்கெட்! (பெண் வரதட்சணை கொடுத்தால் தான் ஆணுக்கு அடிமையாக முடியும்) ஆண்கள் பணம் திரட்டும் ஆதாரமாக்கியுள்ளது. வரதட்சணை என்ற பெயரில் கணவனும், அவன் வீட்டாரும் உழைக்காமலே சொத்து சேர்க்கும் வழியாயிற்று. திருமணம் என்ற சந்தையில் வியாபார பேச்சுவார்த்தை முடிந்தவுடன், மீதமுள்ளது ஆண்-பெண்களுக்கிடையேயான அவமதிப்புதான். புகுந்த வீடே பெண்ணுக்கு கொலைக்களமாகிவிடுகிறது.

***ஆக மொத்தம், ஆணாதிக்க சமூகத்தில் திருமணம் என்பது பெண்ணுக்கு வழங்கும் தூக்கு தண்டனையாக தான் உள்ளது.***

*குடும்பம் :-*

நாம் சென்ற இதழில் பார்த்தபடி, தனி சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டு தான் குடும்பம் தோன்றியது. சொத்துக்களைத் தக்க வைத்துக் கொள்ளவும், ஆண் வழியில் மாற்றம் செய்யவும் தான் குடும்ப அமைப்பு தோன்றியது. இச் சமூகத்தில், கணவன் மனைவிக்கிடையே பரஸ்பர பாலியல் நேர்மையும், அன்பும் பெற்றிருப்பதே குடும்பம் என்றழைக்கப்படுகின்றது. ஆனால் அதே சமயம், கள்ள உறவே எப்போதும் வழக்கமாக இருந்து வருகின்றது. ஆண் எப்பொழுதும் பிரகடனப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை உடைத்து, திருமணத்திற்கு அப்பாற்பட்ட பாலியல் உறவுகளைக் கொண்டிருக்கலாம்.

முதலாளியத்தின் கீழ் அனைத்து குடும்ப உறவுகளும் பண்ட உறவுகளாயின முதலாளியம் தோன்றிய பிறகு குடும்பத்தில் பரஸ்பர பகிர்வுக்கு மாறாக, கணவன் மனைவிக்கிடையேயான உறவு பரிவர்த்தனம் பொருள் உறவாக மாறியது.

'படி தாண்டா பத்தினி' என்ற பட்டத்துடன் குடும்பத்திற்காக சேவை செய்வதே தலையாயக் கடமையாக பெண் கொண்டிருக்க வேண்டும் என்கின்றது சமூகம்.

***ஒட்டு மொத்தமாக, குடும்பம் பெண்ணை அடிமையாக்கும் சிறைசாலையாகவே உள்ளது.***



படிப்பகம்

www.padippakam.com

***வீட்டு உற்பத்தி:-***

பெண்ணின் தனி சிறப்பாகவும், பெருமையாகவும் புகழப்படுவது குடும்ப பராமரிப்பும், சமையல் உள்ளிட்ட வீட்டு வேலைகளும்தான். மனைவி என்றும் 'இல்லாள்' என்றும் தமிழ் சொற்கள் பெண், வீட்டைப் பராமறிப்பவள் என்று பொருள்பட அழைக்கின்றன. குடும்பம், பெண்ணின் உழைப்பை நன்றியற்றதாகவும், மதிப்பற்றதாகவும் ஆக்குகிறது. வீட்டு உழைப்பு எவ்வித மதிப்புமின்றி, ஒரு பொருளற்ற தொண்டூழியமே! இது எவ்வித வளர்ச்சியுமின்றி மீண்டும் மீண்டும் செய்யப்படுகிறது. பெரும்பாலான வீட்டு உழைப்பு சமைத்தல், துணி துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் போன்றவற்றிற்கே செவழிக்கப்படுகின்றது.

***பெண்கள் இக்கொடுமைகளிலிருந்து காப்பாற்றப்படவில்லையெனில் விடுதலை என்ற வார்த்தைக்கே பொருளின்றிப் போய்விடும்***

மேலும், இன்று பெண்கள் வேலைக்குப் போனாலும், வீட்டு வேலையும் செய்தே ஆக வேண்டும், என்ற இரட்டை நுகத்தடி! இரண்டு முறை அவள் அடிமையாகிறாள்; ஒன்று தொழிற்சாலை முதலாளிக்கு, மற்றொன்று குடும்பத் தலைவனுக்கு. மேலும், இந்தியா போன்ற அரைக் காலனிய - அரை நிவபிரபுத்துவ சமூகத்தில் குடியும் மனைவியை அடிப்பதும் வழக்கமாக இருப்பதால், இரு சுமை அவளின் இரு துயரமாகிறது.

***பாலியல் ஒடுக்குமுறைகள் :-***

காவல் நிலையங்கள் முதல் சாமியார் மடங்கள் வரை பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது சகஜமாகி விட்டது. இன்று பெண்கள் பேருந்தில் செல்வதற்கே பயப்படக்கூடிய நிலை. ரோட்டில் கூட நடமாட முடியவில்லை. சினிமாவின் சீரழிவால் பள்ளிகளிலும், வெளியிலும் சிறுமிகள் கூட பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றன.வேலை தேடி செல்லுமிடத்திலும், உயர் பதவி கேட்குமிடத்திலும் பாலியல் சுரண்டலுக்கு பெண்கள் நிர்பந்திக்கப்படுகின்றனர். கிராமப்புறங்களிலும் நகரத்திலும் கூலி வேலை செய்யுமிடங்களில் ஆதிக்க சக்திகளால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

***சொத்துரிமை:-***

பெண்கள் ஆண்களை விட உழைப்பில் ஈடுபட்டாலும் அவளுக்காக சமூக அந்தஸ்து மறுக்கப்படுகின்றது. பெண்களின் மீதான அடக்குமுறைக்கான அடிப்படை காரணம் செல்வத்தின் மீது ஆதிக்கம் செலுத்த பெண்ணுக்குள்ள உரிமையை மறுப்பது தான்! பெண்கள் வெளியில் சென்று சம்பாதித்தாலும், அந்த செல்வத்தின் மீதான உரிமை அவளுக்கு மறுக்கப்படுகின்றது.. பெண்ணை மற்றவரிடம் திருமணம் செய்து கொடுத்து விடுவதும், ஆண் சொத்துக்கான வாரிசாகவுமே பண்டைய காலம் தொட்டு சமூகத்தில் வளர்ந்து வரும் விதியாக உள்ளது. சொத்துரிமைக்கான சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவை காகித சட்டங்களாகவே உள்ளன.

புராதன காலந்தொட்டு இந்நாள் வரை பெண்ணின் விடுதலைக்கு பெரும் தடையாய் இருப்பது சொத்துரிமைதான்.


படிப்பகம்

www.padippakam.com

### அரசியல் பங்கேற்பும் தலைமையும் :-

இன்றைய சமூகத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு பல தடைகள் உள்ளன. அரசியல் என்றாலே ஆண்களுக்குத்தான்! பெண்கள் தகுதியற்றவர்கள் என்ற கருத்தை இந்த ஆணாதிக்க சமூகமானது நிலை நிறுத்தி வருகின்றது. இதையும் மீறி ஒரு பெண் அரசியலில் பங்கேற்றாலும் பல தடைகளையும் அச்சுறுத்தல்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் ஓட்டுக் கட்சிகளில் பங்கேற்கும் ஒரு சில பெண்கள் அரசியலில் வந்தாலும், இந்த சமூகத்தை கட்டிக்காப்பவர்களாகவே உள்ளனர்.

பிற காரணிகளைப் போன்றே, அரசியல் பங்களிப்பும், தலைமை ஏற்றலும், பெண் விடுதலைக்கு சம முக்கியத்துவம் வாய்ந்த முன் நிபந்தனைகளாகும். சமுதாய உற்பத்தியில் பங்கேற்பது ஓர் முன் நிபந்தனையாக இருந்தாலும், சமுதாய உற்பத்தியில் பங்கேற்றல் தானாகவே அவர்களது விடுதலைக்கு அவசியமான உணர்வைத் தந்து விடாது. நம் நாட்டில் மட்டுமின்றி, பின்லாந்து, ஸ்கான்டிநோவியன், ருஷ்யாவிலும் கூட இது தெளிவான உண்மையாகும்.

### புதிய ஜனநாயகப் புரட்சி, சோசலிசம், பெண் விடுதலை:-

பெண் விடுதலைக்கு தடையாய், உள்ள இத்துணை தடைகளையும் உடைத்தெறிவது என்பது இந்த சீர்கெட்ட சமூகத்தை மாற்றியமைக்கும் போது மட்டுமே அதாவது புதிய ஜனநாயகப் புரட்சி செய்வதால் மட்டுமே சாத்தியமாகும்! இதை விடுத்து இந்த கழிச்சடை சமூகத்திலே சில சீர்திருத்தங்களை மட்டும் செய்வதால், ஆணாதிக்கத்தை வீழ்த்துவது, பெண்ணடிமை சங்கிலியை உடைப்பது என்பதெல்லாம் கற்பனையே!

***பெண்ணை இரண்டாம்தர குடிமகளாகக் கருதும் இந்த ஆணாதிக்க சமூகத்தை தூக்கியெறியும் புதிய ஜனநாயப் புரட்சியை செய்வதால் மட்டுமே பெண்களின் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்க முடியும். எனவே பெண் விடுதலை அடைய புதிய ஜனநாயகப் புரட்சி செய்வது தான் ஒரே வழி***

**ஆனால், ஒரு சிலர் இந்த உண்மையை புரிந்துக்கொள்ளாமல், ஜெயா, சோனியா போன்றோர் ஆட்சிக் கட்டிலில் அமர நடத்தும் சண்டையும், இந்திரா, ரப்ரி தேவி போன்றோர் ஆட்சிப் பீடத்தை பிடித்தவுடன் பெண் உரிமை, பெண் விடுதலை கிடைத்து விடுவதாக நையாண்டித் தனமாக பேசுகின்றனர்.**

இப்படிப்பட்ட பணக்கார சீமாட்டிகள் பெண் உரிமையை நிலை நாட்டுபவர்கள் என்றோ, பெண் விடுதலை அடைய வழிவகுப்பவர்கள் என்றோ, என்றுமே கூறமுடியாது. ***இவர்கள் பெண் உரிமைக்கும், பெண் விடுதலைக்கும் எதிரானவர்கள். என்பதை அறுதியிட்டு கூறலாம். பெண்ணடிமைதனத்தின் அடித்தளமான ஏகாதிபத்திய-நிலவுடமை சுரண்டலை பேணிக் காப்பதும், இந்த சீர்கெட்ட சமூகத்தை பாதுகாப்பதும் தான் இவர்களின் தலையாய கடமை. ஊழல் ராணியான ஜெயாவின் ஆட்சியும், மாட்டுத்தீவன ஊழல் பெருச்சாலியான லல்லுவின் ரப்பர் ஸ்டாம்பான ரப்ரியின் ஆட்சியும், இந்த உண்மையை அம்பலப்படுத்துகிறது.***

### யதார்த்தத்தில் பெண் உரிமை என்பது.

*பல்வேறு சுரண்டல்களில் ஆட்பட்டு கிடக்கும் கிராமப்புற கூலி ஏழை விவசாயப் பெண்கள், நகர்புற தொழிலாள வர்க்கப் பெண்கள், ஆணாதிக்க கொடுமைகளுக்கு இரையாகி வரும் நடுத்தர வர்க்கப் பெண்கள், அடிமைப்பட்*


படிப்பகம்

www.padippakam.com

கிடக்கும் பல்வேறு பிரிவுகளை சார்ந்தப் பெண்கள் ஆகியோரின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதே!

சமூகத்தின் பல்வேறு கொடுமைகளுக்கு இரையாகும் இவர்களின் விடுதலையே, பெண் விடுதலை!

இத்தகைய பெண்களின் விடியலைக் காணவே, புதிய ஜனநாயகப் புரட்சியை வென்றெடுக்க த.பெ.க. தமிழகத்தில் போராடி வருகின்றது.

இந்த புதிய ஜனநாயகப் புரட்சி ஆணாதிக்கத்தை பாதுகாக்கும் அடித்தளமான நிலபிரபுத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் வீழ்த்தும். இப்புதிய ஜனநாயக புரட்சி கால கட்டத்தில் பெண்ணடிமை சங்கிலிகள் உடைக்கப்படும். பெண்களின் ஜனநாயக உரிமைகள் வென்றெடுக்கப்படும். ஆனால், முழுமையான பெண் விடுதலையை பெற்றுத்தரும் என்று எதிர்பார்ப்பது தவறு.

ஆணாதிக்கப் பண்பாடு, பிற்போக்கு திருமண முறை, போன்றவை புதிய ஜனநாயக ப் புரட்சியில் பகுதியளவு தீர்க்கப்படுமே ஒழிய, முழுமையான விடுதலை என்பது, நாம் மேற்கண்ட ஏழு தடைக் கற்கள்களை உடைத்தெறிந்து பெண்களை சமூக உற்பத்தியில் ஆண்களுக்கு சமமான நிலையை அடையும் போதே சாத்தியமாகும். பெண்ணடிமைத்தனத்தின் ஆணி வேரான தனி சொத்துரிமை தூக்கியெறியப்பட்டு அனைத்து உடைமைகளும் சோசலிச சமூகத்தில் சமூகமயமாக்கப்படும் பொழுது தான் பெண் விடுதலை சாத்தியம். ஆனால், முழுமையான பெண் விடுதலை என்பது ஆண்-பெண் சமத்துவம் என்பது கம்யூனிஸ சமூகத்தில் மட்டுமே சாத்தியம்! அத்தகையதொரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவகற்கான நீண்டப் போராட்டத்தில் பெண்களை அணிதிரட்டுவதையே த.பெ.க தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்த இலட்சியத்தை அடைய தோழர், நிர்மலா, ஸ்வர்ணலதா, ஸ்நேகலதா, என்று ஆயிரமாயிரம் தோழர்கள் தங்களின் இன்னுயிரை ஈந்த பாதையில் த.பெ. க வீறுநடை போடும் என்பது உறுதி!

-தேன்மொழி

---

## வேலையில்லாத் திண்டாட்டம்

வானத்தின் கண் தோன்றும்

சூரியரே, சந்திரரே, நட்சத்திரர்களே -

நீங்களாவது

காணாமல் போய்விடுங்கள் - உங்களைத்

தேடும் பணியிலாவது - எங்களுக்கு

வேலை கிடைக்கும்.

- மா. பார்வதி



படிப்பகம்

www.padippakam.com

## விரலுக்கேத்த வீக்கம் - பட விமர்சனம்

ஒரு சாதாரண நடுத்தர தொழிலாளி வர்க்கத்தை சார்ந்த மூன்று குடும்பங்களின் கதைதான் விரலுக்கேத்த வீக்கம். லிவிங்ஸ்டன்-குஷ்பு, வடிவேலு-கோவை சரளா, விவேக்-கனகா ஜோடிகளாக மூன்று குடும்பங்கள். குஷ்புவிற்கு இரண்டு குழந்தைகள், கோவை சரளாவிற்கு நான்கு குழந்தைகள். இந்த மூன்று வீட்டு ஆண்களும் ஒரே மோட்டார் கம்பெனி தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்கள். இந்த மூவரும் வருமானத்திற்கு மீறிய செலவுகள் செய்வர். வர சம்பளத்தில் பாதி செலவு செய்து, பாதி தான் மனைவிக்கு கொடுப்பார்கள், குடும்பத்தில் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தால் கூட அதிக வட்டிக்கும் கடன் வாங்கி குடும்பத்தை ஆடம்பரமாக நடத்துவார்கள். இதைத் தடுத்த மனைவியின் கருத்தை மதிக்கமாட்டார்கள் பெண்கள் சிந்திக்கக் கூடாது வேலைக்குப் போகக்கூடாது, குடும்பத்தை பராமரித்து, கணவனுடைய தேவைகளை பூர்த்தி செய்து அவருக்கேற்ப இருக்கணும் என்று நினைப்பவர்கள் இவர்கள். அதாவது வேலை செய்யும்பொழுது வேலைக்காரியாகவும் , கஷ்டங்கள் வரும்போது ஒரு நல்ல யோசனை கொடுக்கும் மந்திரியாகவும், பரிமாறும் போது தாய் போலவும், படுக்கை அறையில் ரம்பை போலவும் இருக்கனும் என்று நினைப்பவர்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பக்கத்து வீட்டில் மாமி வாடகைக்கு வந்ததோடு அவர்களுக்கு கஷ்டங்கள் ஆரம்பித்தன. மாமி படித்து ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியில் சூப்பர்வைஸராக வேலை செய்து வருகிறார். இவரின் கணவர் வாத்தியாராக வேலை செய்து வருகிறார். இவர் பெண்களின் கருத்துக்களை மதிக்கணும், வீட்டு வேலைகளில் பெண்களுக்கு உதவி செய்யணும், ஆணும் பெண்ணும் சமமாக இருக்கணும் போன்ற முற்போக்குக் கருத்துக்கள் உடையவர்.

மாமியை பார்த்தப் பிறகு, மூவரும் பெண்கள் வேலைக்கு போனால் தான் சமூகத்திலும், குடும்பத்திலும் மதிப்பு, பொருளாதார ரீதியாக சுயமாக நிற்க முடியும் என்ற எண்ணத்துடன் கணவனுடன் போராடி வேலைக்கு செல்வார்கள். இறுதியில் பெண்களின் கருத்துக்களை மதிக்கணும் என்று சொல்ல வைத்து கதையை முடித்துள்ளார் இயக்குநர்.

சமீபமாக வந்த எல்லா படங்களை விட இந்தப் படம் நல்ல கருத்துக்களுடன் இருந்தது என்பதில் அதிசயம் இல்லை. நடுத்தர குடும்பங்களின் இன்றைய நிலையை மிக யதார்த்தமாக காட்டியுள்ளார் இயக்குநர்.இளைஞர்களை திசை திருப்பும் காதல் என்ற பெயரே இல்லாமல் முழுக்க முழுக்க நடைமுறைப் பிரச்சினைகளை ஒட்டி எடுத்த படம் இது. ஒரு நடுத்தர வர்க்க ஆணாதிக்க கணவனின் சிந்தனை மிகத் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. அதே போல் இன்றைய நிலவுடமை சமுகத்தில் குடும்பத்தில் பெண்களுக்கான வேலை பிரிவினையாக பிரிக்கப்பட்ட வீட்டு வேலையில் சமைப்பது துணி துவைப்பது, பிள்ளைகளை பார்ப்பது, கணவனை சந்தோஷப்படுத்துவது மொத்தத்தில் சுயமரியாதையோ சுய சிந்தனையோ இல்லாமல் குடும்பத்திற்காகவே தன்னுடைய வாழ்க்கைய அர்ப்பணிக்கும் அடிமைகளாக அதுவும் பொருளாதார சுதந்திரம் கூட இல்லாத பெண்களின் வாழ்நிலை இன்னும் எந்த அளவிற்கு கொடூரமாக இருக்கிறது என்பதை யதார்த்தமாக காட்டியுள்ளார் இயக்குநர். இன்னும் மனைவி வேலைக்குப் போனாலே தனக்கு மரியாதை குறைந்து விடும் என்றும் பொருளாதார நெருக்கடி இருப்பினும் மனைவி வேலைக்கு செல்லக்கூடாது, 'படிதாண்ட



படிப்பகம்

www.padippakam.com

பத்தினி'யாகவே இருக்க வேண்டும் என்பதற்காக அவள் வேலைக்கு செல்கிறேன் என்று சொன்னாலே அவளை திட்டுவது, அடிப்பது என்ற கணவனின் ஆணாதிக்க சிந்தனையை காட்டியது இத்திரைப்படம். இன்னும் மோட்டார் கம்பெனியில் தொழிலாளர்கள் போனசுக்காக போராடும் பொழுது தொழிற்சங்கத் தலைவர்கள் முதலாளிகளுடன் சமரசம் செய்து கொண்டு, தொழிலாளிகளை எப்படி ஏமாற்றுகின்றனர் என்ற காட்சி யதார்த்தமாக இருந்தது.

இவ்வளவு சிறப்பம்சங்கள் இருப்பினும் சில குறைபாடுகள் கூட இருக்கின்றன. மாமி இந்த மூன்று பெண்களிடம் வேலைக்கு போக சொல்லி வேலைக்கு போனால் நிறைய சேமிக்கலாம் நிறைய சொத்து சேர்க்கலாம் என்று வழிகாட்டுவது. இந்தப் பிரச்சனைகளுக்கு முழுக் காரணம் பொருளாதாரம்தான். அது இருந்தால் நம் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்ற கருத்தை அழுத்தமாக சொல்வது. இன்றைய சமூகத்தில் சேமித்தல் என்பது மக்களை ஏமாற்றக்கூடிய ஒரு விசயம். ஏனென்றால் இன்று எக்ஸ்போர்டு கம்பெனிகளில் டெய்லருக்கு மட்டும்தான் ஓரளவு நல்ல சம்பளம் மீதி ஹெல்பர், கட்டிங் போன்றவர்களுக்கு 600/- 700/- தான் சம்பளமே! வயிறு நிறைய கஞ்சியே இல்லாத நேரத்தில் சேமிப்பது எப்படி? இது மக்களை வானத்தில் பறக்க வைப்பதுதான். ஒரு உயர் நடுத்தர வர்க்கத்துக்கு (மாமி போன்றவர்களக்கு) இது சாத்தியம். ஆனால் சாதாரண நடுத்தர குடும்பங்களில் இது எப்படி சாத்தியம்? ஏற்கனவே மேலேயும் போக முடியாமல் கீழும் போக முடியாமல் இருக்கின்ற நடுத்தர வர்க்கத்தின் வானத்தில் பறக்கும் ஆசைகளை இது இன்னும் தூண்டிவிட்டு நடைமுறை யதார்த்தத்திற்கு மாறாக இருக்கிறது.

இரண்டாவது, எக்ஸ்போர்டு கம்பெனி முதலாளிகள் ரொம்ப நல்லவராக காட்டுவது. இது உண்மையிலேயே பெண்களை மிகவும் ஏமாற்றக் கூடிய விஷயம். இன்று எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை செய்யும் எந்த பெண்ணை கேட்டாலும் முதலாளிகள் எப்படி என்பதையும், எப்படி சுரண்டுவார், எப்படி பாலியல் ரீதியான கொடுமைகள் செய்வார்கள் என்பதும் மிகத் தெளிவாக கூறுவார்கள். இதற்கு மாறாக முதலாளிகள் நல்லவராகவும் நல்ல சம்பளம் கொண்டிருப்பவராகவும் காட்டுவது ஏற்றுக் கொள்ள முடியுமா?

மூன்றாவது, ''பொருளாதார சுதந்திரம்தான் பெண் விடுதலைக்கு வழி'' என்பது. அதாவது பெண்களுக்கு பொருளாதாரம் மிகப்பெரிய பிரச்சனைதான். ஆனால் பணம் இருந்தாலே அவர்களின் பிரச்சனை தீர்ந்துவிடுமா? இல்லை. ஏழை பணக்காரன் இல்லாத, சாதி-மதம் இல்லாத, ஆண்-பெண் வித்தியாமில்லாத ஒரு சமூகத்தை படைக்கும் போது, ஒட்டு மொத்த இந்த சமூகத்தை மாற்றும் பொழுதும், அதாவது வர்க்கமற்ற சமூகத்தை படைக்கும்போது சமூக, அரசியல், பண்பாட்டுதளத்தில் சம உரிமை கிடைக்கும்போது மட்டும்தான் பெண் விடுதலை கூட கிடைக்கும் என்ற உண்மையை மறைத்துவிட்டு, பொருளாதார சுதந்திரம்தான் பெண் விடுதலைக்கு வழி என்றக் கருத்தை அழுத்தமாக சொல்வதுதான் இப்படத்தில் வருத்தப்பட கூடிய வஷயம்.

எப்படி இருப்பினும், கருத்தே இல்லாமல் வெறும் இலாப நோக்கத்திலிருந்து வெளிவரும் இன்றைய சினிமா உலகத்தில் இது போன்ற நல்ல கருத்துள்ள, மக்களை சிந்திக்க வைக்கும் சினிமாவை வரவேற்றுத்தான் ஆக வேண்டும்.

**- செல்வி**



படிப்பகம்

www.padippakam.com

## மாஞ்சோலையில் கொலைவெறி தாக்குதல்

நெல்லை மாவட்டத்திலுள்ள மாஞ்சோலையில் தோட்டத் தொழிலாளர்கள் 25 பேர் போலிஸின் காட்டுமிராண்டித் தனமான வெறித்தாக்குதலால் உயிர் மாய்ந்ததை நாமனைவரும் அறிவோம்! இந்திய மக்களின் இரத்தத்தை சுரண்டுவதில் வல்லவனான வாடியாவை முதலாளியாகக் கொண்டதுதான் இந்த மாஞ்சோலை தேயிலைத் தோட்டம்!

தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி இந்த முதலாளிகள் அடிக்கும் கொள்ளை வருடத்திற்கு ரூ. 350 கோடி. தங்களின் தினக் கூலியை உயர்த்தக் கோரியும், வேலை நேரத்தைக் குறைக்கக் கோரியும் வேலை நிறுத்தம், மறியல் என்று மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் போர் குரல் ஒலிக்க ஆரம்பித்தது. இந்தப் போராட்டத்தை வளரவிட்டால் தங்களின் கொள்ளைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சிய முதலாளிகளும், அவர்களின் கூலிப்படையான போலீஸும் பெண்கள், குழந்தைகள் உட்பட 600 பேரை ஜூன் 6,7 தேதிகளில் நடந்த ஆர்பாட்டத்தில் கைது செய்து சிறையிலடைத்தது!.



மனு கொடுக்கச் சென்றவர்களை அடித்துக் கொன்ற தமிழகப் போலீசின் காட்டுமிராண்டித்தனம்

ஆனால், அரசின் இந்த கெடுபிடிகளுக்கு தொழிலாளர்களின் போர் குரல் பணியவில்லை மாறாக தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தியும், கைது செய்தவர்களை விடுவிக்ககோரியும் 4000 தொழிலாளர்கள் ஆட்சியாளர் அலுவலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

போராட்டங்களை ஒடுக்கி பாஸிஸத்தை நிலைநாட்டுவதில் கைதேர்ந்த கருணாநிதி அரசு, இந்தப் போராட்டத்தை மட்டும் விட்டு வைக்குமா என்ன? ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் மீது தடியடி பிரயோகம் செய்து ஆண் பெண், குழந்தை என்று எந்த பாரபட்சமின்றி 25 பேரை கொன்றுக் குவித்தது! பெண்களை நிர்வாணமாக்கி தடியடி செய்து துப்பாக்கியின் பின்புற பெயனெட்டால் தாக்கி கொன்றதை வார்த்தைகளால் விவரிக்கக் கூட முடியாது! இத்துணையும் செய்துவிட்டு தாமிரபரணி ஆற்றில் மூழ்கி இறந்து விட்டனர் என்று புளுகல் வேறு மறுபக்கம்!!.

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், காக்கி சட்டை போட்டு விட்டால் மற்றவர்கள் தங்களுக்கு அடிமை என்று இறுமாப்பு பிடித்த காவலர்கள், ''பொம்பள கொடி பிடிக்கணுமா? நீதானே மொதல்ல பேனர் பிடிச்சுக்கிட்டு வந்தே, இனி கொடி தூக்குவியா ஊர்கோலத்துக்கு வருவியா? கூச்சல் போடுவியா?'' என்று ''கடமை, கண்ணியத்துடன் அடித்து, பூட்ஸ் கால்களால் உதைத்து பெண்களை சித்ரவதை செய்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

ஊர்வலத்தின் முதலில் பேனர் பிடித்து வந்த சீதாலட்சுமியை, முதலில் கலெக்டர் வளாகத்திலிருந்து வந்த கற்கள் பதம் பார்த்தன. பின் போலிஸின் தடியும், பூட்ஸ் கால்களும் அவரின் வயிற்றில் கடுமையாக தாக்கியதில் நீரோடு இரத்தம் போய்க்கொண்டிருந்த சீதாலட்சுமியை தாமிரபருணி ஆற்றில் தூக்கிப்போட்டது ''மக்களை காக்கும்'' காவல்துறை!.

ரத்தின மேரி என்பவரை அடித்து ஆற்றில் தள்ளியது மட்டுமல்லாமல், நீச்சல் தெரிந்த அவர் கரையேற முயற்சித்த போது விலாவில் துப்பாக்கி பெயெனெட்டை குத்தி ஆற்றுக்குள் தள்ளியது! மேலும், மனிதாபிமானத்திற்கு அர்த்தமே தெரியாத காவல் துறை, அவரின் ஒன்றரை வயதுக் குழந்தையையும் ஆற்றில் தூக்கி எறிந்தது.

காவல் நிலையப் பெயரில் ''கற்பழிப்பு'' கூடங்களை நடத்தும் தமிழக காவல் துறையின் வக்கிர புத்தி இந்த போராட்டத்திலும் வெட்ட வெளிச்சமானது! ஜோஸ்பின் என்பவரை நிர்வாணமாக்கி தலையில் அடித்து ஆற்றில் தள்ளி தன்னுடைய கொலை வெறியை தீர்த்துக்கொண்டது.

இத்துனை கொடூர அடக்குமுறைகளையும் தங்கள் தோள்மீது சுமந்துக் கொண்டிருக்கும் தொழிலாள வர்க்கம் மௌனமாக இருந்ததாக சரித்திரம் இல்லை! மகத்தான இலட்சியத்திற்காக உயிர்நீத்த தங்கள் வர்க்க சகோதர, சகோதரிகளின் கனவை நிறைவேற்ற நிச்சயம் கிளர்ந்தெழுவார்கள்!!.

*- கல்பனா*

---

## சுதாவுக்குக் கடிதம்

அன்புள்ள சுதாவிற்கு,

லதா எழுதும் கடிதம் . நான் நலமாக உள்ளேன். அங்கு உன் நலத்தையும், உன் குடும்பத்தாரின் நலனையும் அறிய ஆவல். நீ ஏதாவது வேலையில் சேர்ந்துள்ளாயா? உனக்கு தற்போது இரண்டு குழந்தைகள் இருக்குமில்லையா? பிள்ளைகள் எல்லாம் பள்ளிக்கூடம் போவார்கள் என்று நினைக்கின்றேன்.

வெகு நாட்களாக நாம் சந்திக்கும் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது, சுதா! கல்லூரி வாழக்கையின் போது நாம் தினமும் சந்தித்து, நாட்டில் நடக்கும் பல விசயங்களை பற்றி நாம் விவாதித்துள்ளோம். ஆனால், இப்பொழுதெல்லாம் கடிதம் எழுதக்கூட நேரமில்லாத அளவுக்கு உனக்கு வேலைகளும், பொறுப்புகளும் வந்துவிட்டதில்லையா? சரி... உன் குடும்ப வாழ்க்கை எப்படி உள்ளது?

நம் கல்லூரி வாழ்க்கையை முடித்தவுடனே உனக்கு 21 வயதிருக்கும் போது


படிப்பகம்

www.padippakam.com

உன் வீட்டில் உனக்கு திருமணம் செய்தார்கள். திருமண வாழ்க்கைக்கு போவதற்கு முன் பல கற்பனைகளுடன் நீ இருந்தாய்! ஆனால், இப்பொழுது உன் கற்பனையெல்லாம் மண்ணோடு மண்ணாக மறைந்து போய். "கணவன் சொல்வதே தேவ வாக்கு" என்றாகி விட்டதில்லையா? என்னிடம் முன்பு கூறுவது போல, இன்னமும் உன்னுடைய கருத்துக்களை, விருப்பங்களை வெளிப்படுத்த கூட இயலாமல் கடினப்படுகிறாயா? எப்பொழுதாவது கருத்து தெரிவித்தால் இப்பொழுது கூட உன்னை உன் கணவர் அடிக்கிறாரா என்ன? இப்பொழுது நாட்டிலுள்ள பொருளாதார சிக்கலினால் உன் குடும்பத்திலும் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை சரி செய்யவாவது, உன்னை வேலைக்கு போக அனுமதிக்கிறாரா? இல்லை... துணி துவைப்பது, சமைப்பது, பாத்திரங்கள் சுத்தம் செய்வது, கணவனுக்கான பணிவிடை, என்று ஆயிரமாயிரம் முறை செக்கு மாடாய் வேலை செய்து கொண்டிருப்பதே உன்னுடைய தலையாயக் கடமையாக கொண்டுள்ளாயா என்ன?

குடும்ப வாழ்க்கை என்று கூறும்போதுதான், நாம் படிக்கும்போது இன்றைய பெண்களின் பிரச்சனைகளைப் பற்றியும் குடும்பங்களைப் பற்றியும் நாம் செய்த விவாதங்கள் நினைவுக்கு வருகின்றது, சுதா! ஒரு பெண் பிறந்ததிலிருந்து இறப்பது வரை அவள் படும் துன்பங்களைப்பற்றியும் இப்படிப்பட்ட இன்னல்களை உடைத்தெறிய அவளின் விடுதலைக்கான, சமூக விடுதலைக்கான போராட்டப் பாதையை நோக்கி செல்ல வேண்டுமானால் அவளின் குடும்பம் முதல் சமூகம் வரை எத்தனை தடைகளை விதிக்கின்றது என்பதைப் பற்றி விவாதித்தோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருவரும் எப்படிப்பட்ட வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கப் போகின்றோம் என்பதைப் பற்றியும் ஆலோசித்தோம். தடைகளிலும், இன்னல்களிலும் சிக்கித் தவிப்பதா? தடைகளை உடைத்தெறிந்து, இத்தடைக்கற்களை சமூக விடுதலைக்கான போராட்டப் பாதையின் படிகற்களாக மாற்ற முயற்சிக்கப் போகிறோமா? என்பதைப் பற்றி ஆழமாக யோசித்தோம்.

இந்த சமூகம் கொடுக்கும் பெண்களுக்கான பாத்திரங்களை ஏற்றுக்


படிப்பகம்

www.padippakam.com
கொண்டவர்களில் நீயும் ஒருத்தியாகிவிட்டாயே? நாம் பேசிய, விவாதித்த முற்போக்கு சிந்தனைகளையெல்லாம் மறந்து உன் குடும்பம்... குடும்பம்... என்ற நான்கு சுவர்களுக்குள்ளேயே உன் வாழ்க்கையை முடக்கிக்கொண்டாயே? ஏன் சுதா? உன் குடும்பத்தில் வந்ததை போலவே எனக்கும் என் சிந்தனைகளுக்கும் பல முட்டுக்கட்டைகள் வந்ததும் உனக்கு தெரியுமில்லையா?

நாம் கல்லூரியில் படித்து கொண்டிருக்கையில் சமூக மாற்றத்திற்கான போராட்டப் பாதையில் ஈடுபட்டபோது என் குடும்பத்தார் என் மீது பூட்டிய விலங்குகளை உடைத்து சமூக சீரழிவுகளை எதிர்க்கும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்ற மன போராட்டத்தில் நான் உழன்று கொண்டிருந்தது உனக்கு நன்றாகத் தெரியும், இந்த மனப்போராட்டத்தில் நான் சமூக மாற்றத்திற்கான போராட்டப் பாதையை தேர்ந்தெடுத்து வெற்றிக் கொண்டதில் மகிழ்ச்சி அடைகின்றேன், சுதா!

சிறுவயதிலிருந்தே பணக்காரர்கள் குளுகுளு பங்களாவில் வசதியாக கார்களில் செல்வதையும், மேல்சாதியினர் கீழ் சாதியினரை ஒடுக்குவதையும் பார்த்து பலமுறை எரிச்சலடைந்துள்ளேன். மறுபுறம், ஏழை உழைக்கும் மக்கள் கடும் வெய்யிலிலும் மழையிலும் ஒரு நாள் வயிற்று கஞ்சிக்காக கடினப்பட்டு உழைப்பதை கண்டு பல நாட்கள் மன உலைச்சல் அடைந்துள்ளேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பல முற்போக்கு சிந்தனைகளையும்,முற்போக்கு அரசியலையும் என் தந்தை எனக்கு சொல்லிக் கொடுத்ததையும் என்னை பல முற்போக்கு புத்தகங்களை படிக்க ஆர்வமூட்டியதையும் உன்னிடம் பகிர்ந்துக் கொண்டுள்ளேன்.

இத்துணை விழிப்புணர்வுகளைப் பெற்ற நான், மாவோ கூறியதை போல இளம் மொட்டாக பதினெட்டாவது வயதிலே நான் படித்த, தெரிந்துக்கொண்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்த துடித்தேன். அப்பொழுது தானே நமக்கு மாணவர் சங்கம் அறிமுகமானது. ஒரு சில நாட்களுக்கு என்னுடைய வேலைகளுக்கு குடும்பத்தில் நல்ல வரவேற்பு இருந்ததில்லையா? மாணவர்களின் பிரச்சனைக்காக மாணவர்கள் எல்லாம் சேர்ந்து ஒருநாள்


படிப்பகம்

www.padippakam.com

உண்ணாவிரதம் இருக்க போகின்றோம் என்று தெரிவித்தபோது தானே, "உண்ணாவிரதம் எல்லாம் இருந்தால் உன் உடல் கெட்டு போய்விடும்" என்று முதல் எதிர்ப்புக் குரல் எழுந்தது. அப்போது எனக்கும் இந்த எதிர்ப்பு புதுமையாகத்தானே இருந்தது.

பின், நம் கல்லூரி மாணவர்களை, போலீஸ் கல்லூரி வளாகத்திலே தடியடி நடத்தி, கண்ணீர் புகை பிரயோகம் செய்ததைக் கண்டித்து உள்ளிருப்புப் போராட்டம் செய்ததனால் மாலை 6.00 மணிக்கு தானே வீடு திரும்பினேன். அப்போது "பொம்பள பொண்ணு சொல்லாமல் கொல்லாமல் இத்தனை மணிக்கா வருவது, மதியத்திலிருந்து நான் எங்கெல்லாம் உன்னைத்தேடி அலைந்தேன் தெரியுமா?" என்று அம்மாவின் அழுகுரல் ஆரம்பித்தது. இரண்டாவது நாள் உள்ளிருப்புப் போராட்டத்திற்கு போகக்கூடாது என்று ஒரு பக்கம் அம்மா, அக்கா, பாட்டி கூற முற்போக்கு கருத்துக்களை சொல்லி கொடுத்த என் தந்தையும், மறுபுறம் அம்மா சொன்னதற்கு மறுப்பு தெரிவிக்காமல், என்னை 'போய் கலந்துக்கொள்' என்று தைரியமூட்டவும் இல்லை. இத்தருணத்தில் கடுமையான மனப் போராட்டத்தில் வீட்டிலே அடைக்கப்பட்டேன். என் சகோதர, சகோதரிகள் உரிமைக்காக போராடும் போது, நான் மட்டும் வீட்டில் அடைப்பட்டு கிடப்பதா என்ற என்னுடைய மன உலைச்சலை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

இதற்கிடையே கல்லூரி நேரங்களில் கல்லூரியை முடித்துவிட்டு மாணவர் சங்க வேலைகளில் நான் செயல்பட ஆரம்பித்த போது, "கொஞ்சம் பார்த்து போ, கல்லூரி படிப்பையெல்லாம் முடித்துவிட்டு பின்பு நீ, இந்த சமூகமாற்ற வேலைகளுக்கு எல்லாம் செல்லலாம்" என்று கூறினார் என் தந்தை. அப்பொழுதுதான், முற்போக்கு கருத்துக்களை ஊட்டி வளர்த்த என் தந்தையே, இந்த கொள்கையை செயல்படுத்த முற்படும் போது இப்படியெல்லாம் சொல்கிறாரே என்று வருத்தத்துடன் உன்னிடம் கூறினேன்.

இன்றைய சீர்கெட்ட சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு சூழ்நிலையில் பெண்களின், மாணவர்களின், இளைஞர்களின்,



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களின், விவசாயிகளின் கொடூர நிலையை தினமும் பத்திரிக்கையில் படித்துக் கொண்டிருக்கையில் நாம் ஏன் முற்போக்கு சிந்தனைகளையும், கொள்கைகளையும் தெரிந்துக் கொண்டு குடும்பம் என்ற நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு கிடக்க வேண்டுமா என்று சிந்தித்தேன்... அனைத்து ஒடுக்குமுறைகளையும் உணர்ந்து, அதை உடைத்தெரிவதற்கான வழிகளையும் தெரிந்து கொண்டு, அதற்கான சரியான பாதையையும் உணர்ந்து, குடும்ப கட்டுப்பாட்டால் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக வேலை செய்ய முடியாமல் போய் விடுமோ? என்று பல நாட்கள் சிந்தித்துள்ளேன். அப்பொழுதுதான் நாம் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக இந்த சமூகம், குடும்பம், புரட்சிப்பாதையை நோக்கி செல்லும் பெண்ணுக்கும் எத்துனை தடைகளை கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்பதை பற்றி ஆழமாக விவாதித்தோம்.

அதாவது ஒரு பெண் பிறந்தது முதல் திருமணமாகும் வரை தந்தையின் கட்டுப்பாட்டிலும், திருமணமானப் பின் கணவனின் கட்டுப்பாட்டிலும், கணவன் இறந்தபின் மகனின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும் என்பதைத்தானே இந்த சமூகம் நமக்கு சொல்லிக் கொடுக்கின்றது என்றோம். இதைத்தானே என் தாயும், தந்தையும் செயல்படுத்த துடிக்கின்றனர். எங்கு தன் மகள் தன்னுடைய கட்டுப்பாட்டை மீறி பெண் விடுதலை... மக்கள் விடுதலை என்று போய்விடுவாளோ என்ற ஏக்கம் என் குடும்பத்தில் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்தப்பட்டதில்லையா? தாத்தாவோ 2 1 வயதாகிவிட்டது கல்யாணம் என்ற கால்கட்டு போட்டு விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று ஒரு மாப்பிள்ளையின் போட்டோவுடன் வந்துவிட்டார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒரு நாள் பெண்கள் சங்கத்தின் ஊர்வலம் முடிய இரவு 8.00 மணியாகிவிட்டதால் அருகிலுள்ள தோழர் ஒருவரின் வீட்டில் தங்கிவிட்டு காலையில் வீட்டிற்கு சென்றேன். வீட்டில் வெடித்ததே பூகம்பம் ! "நீ நினைத்த நேரத்திற்கு எல்லாம் வந்து போக இது வீடா என்ன? ஏன் இரவு வீட்டிற்கு வரலை? நீ ஒன்னும் பெண் விடுதலை சமூக விடுதலைக்காக


படிப்பகம்

www.padippakam.com

பாடுபடும் முழுநேர ஊழியரும் இல்ல, இப்படி தகவல் கொடுக்காமல் நினைத்த நேரத்திற்கு வந்து போக...'' என்று அப்பாவின் குரல் உயர்ந்தது. அருகிலுள்ள வீட்டிற்கெல்லாம் அப்பாவின் கோபக் கனல் கேட்டு விடுமோ என்று என் தாய், வீட்டின் அறை கதவுகளையெல்லாம் தாழிட்டு விட்டு, தன் பங்கிற்கு அவரும் திட்டினார்.

அக்கா, தம்பி அனைவரும், ''நீ நினைப்பது போல் சமூக மாற்றம் எல்லாம் சாத்தியமில்லை. நீ ஏன் உன் வாழ்க்கையை வீணடிக்கிறாய்?'' என்றுக் கூற ஆரம்பித்தனர். ''காலையிலிருந்து கார்ப்பரேஷன் ரோட்டை சுத்தம் செய்துவிட்டு வரியா'' என்று கேலியும் செய்தனர்.

எனது செயல் பாட்டை சிறிது சிறிதாக தடுக்க முயன்றவர்கள் கடைசியாக ''உடல்நிலை சரியில்லாமல் உள்ள நீ எப்படி சமூக மாற்றத்திற்கானப் போராட்டத்தில் ஈடுபட போகிறாய்'' என்று ''பரிதாபமாக'' கூறியும் முட்டுக்கட்டை இட பார்த்தனர். ஆனால், இவர்கள் கூறுவதுபோல், சமூக மாற்ற போராட்டத்தில் ஈடுபடாமல் வேலைக்கு மட்டும் சென்று வந்து வீட்டு வேலைகளை பார்த்துவிட்டால் உடல்நிலை சரியாகிவிடுமா என்ன? எனக்கு புரியவில்லை, சுதா!

ஆனால், குடும்பத்தாருக்கு ஒன்றுத் தெளிவாக தெரியும், சுதா! நான் செய்யும் காரியம் சரியானது. உழைக்கும் மக்களின் விடுதலைக்காக போராட்டம் செய்வது, சரிதான் என்று உணர்ந்தவர்கள்தான் அவர்கள்! மற்றவர்கள் போராட்டத்தில் ஈடுபடலாம். ஆனால் என்னதான் இருந்தாலும் தன் மகள் விடுதலை போராட்டத்தில் ஈடுபட அவர்கள் விரும்பவில்லை. அதனால்தான் இத்துனை முட்டுக்கட்டைகள்!

இந்த முட்டுக்கட்டைகள் பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் போது, குடும்பத்தைப் பற்றி லெனின் கூறியது நினைவுக்கு வந்தது. ''குடும்பம் ஒரு குட்டி அரசு போன்றது'' என்று தோழர். லெனின் கூறியது சரியானதே என்பதை உணர்ந்தேன். குடும்பம், அன்பு, பாசம் என்ற வலைப்பின்னலால் நம்முடையப் போராட்ட உணர்வுகளை பணிய வைக்கும் வலிமைப் பெற்றது. அரசும், எதிரியும்,


படிப்பகம்

www.padippakam.com

அவன் நமக்கும், நம் இலட்சியத்திற்கும், கொள்கைக்கும் எதிரானவன் என்று நேரடியாக நாம் எதிர்த்து நின்று சண்டைப் போடலாம். ஆனால், குடும்பத்திலோ, ஆரம்பித்தில், அவர்களை பாதிக்காத வண்ணம், அவர்களின் வேலைகளுக்குத் தடை வராதவரைக்கும் "போராட்டத்திற்கு போய் வா" என்பார்கள். கொஞ்சம் நாட்கள் கழித்து நம்முடைய ஈடுபாடு போராட்டத்தில் அதிகமானால் தடுக்க முயற்சிப்பர். அதையும் மீறி செயல்பட்டால் "நீ சம்பாதித்து கொடுத்தால் தானே நம் குடும்பம் நல்லா இருக்கும்; வயதான காலத்தில் அப்பாவால் இன்னமும் சம்பாதிக்க முடியாது; குடும்ப பொறுப்புகளை நீ சுமக்க வேண்டும்"என்று பல "அன்பு" வார்த்தைகளால் அடக்குவது, இதையும் எதிர்த்து, சமூக விடுதலைக்கான போராட்டத்திற்காக போய்தான் ஆவேன் என்றால், " நீ வீட்டை விட்டு போகக் கூடாது" என்று கடுமையான வார்த்தைகளால் ஒடுக்குவது என்று அனைத்து அரசின் குணாம்சங்களையும கொண்டது தான் குடும்பம் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டேன், சுதா!

இப்படிக் குடும்பத்தின் கட்டுப்பாடிடிற்குள் என்னைப் போல முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் சிக்குண்டுவிட்டால் ஆயிரமாயிரம் உழைக்கும் மக்களின் விடுதலை எப்படி சுதா கிடைக்கும்? தினமும் 'ஸ்டவ்' வெடித்து கற்பழிக்கப்பட்டு இறந்துக் கொண்டிருக்கும் அந்த அக்காக்களின் அழுகுரல்களை துடைப்பதுதான் எப்படி? பல கம்பெனிகள் இழுத்து மூடப்பட்டதால் ஒரு வேளை கஞ்சிக்காக அவதிப்படும் பல தொழிலாளக் குடும்பங்களின் பிரச்சனைகளுக்கானத் தீர்வை நோக்கி எப்படி சுதா செல்ல முடியும்? எழுபது சதவீத மக்கள் தொகையினரான விவசாயிகளின் பிரச்சனைகளைப் பற்றி கேட்கவே முடியாது சுதா... இப்படித்தானே இந்தியாவின் நிலையிருக்க, நான் மட்டும் குடும்ப வலையில் சிக்கி, இந்திய உழைக்கும் மக்களை ஏமாற்றுவதா?

என் குடும்பம், என் தாய், தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது, திருமணமான பின் குழந்தைப் பெறுவது, கணவன் குழந்தைகளை பராமரிப்பது, வீட்டிற்காக உழைப்பது, சம்பாத்தியம் பத்தாமல் வெளியில் சென்று உழைப்பது,


படிப்பகம்

www.padippakam.com

பின் குழந்தைகளை படிக்க வைப்பது, பிள்ளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது வந்தபின் அதற்கு திருமணம் செய்து முடிப்பது, பின் பேத்தி பேரனை பார்த்து சந்தோசப்படுவது... இதுதானே என் குடும்பத்தார் கூறும் குடும்ப பொறுப்புகள்... நீயும் இப்படிப்பட்ட குடும்ப பொறுப்புகளை ஏற்றுக்கொண்டதனாலேதானே பெண் விடுதலை பற்றி நீ பேசியதெல்லாம் காற்றோடு போய்விட்டது. இக்குடும்ப பொறுப்புகளால், உன்னால் ஒரு நிமிடமாவது மற்றவர்களின் துன்பங்கள், மக்களின் அடிப்படை பிரச்சனைகள் என்று நாம் கல்லூரியில் பேசியதெல்லாம் நினைவுக்கு எட்டுகின்றதா? மாறாக, எந்நேரமும் கணவனுக்கு பணிவிடை, மகன்களின் படிப்பு என்று மாடாய் உன் குடும்ப நலனுக்காகவே தானே வாழ்கிறாய்.

யோசித்துப்பார் சுதா!. இப்படியா என் வாழ்க்கையும் இருக்க வேண்டும். அப்படியென்றால் எதற்காக நான் முற்போக்கு புத்தகங்களை எல்லாம் படித்தேன். ஏன் மற்றவர்களிடம் சமூக விடுதலையை பற்றி பேசினேன். ஒரு முடிவில்லாக் குடும்ப பொறுப்புகளை ஏற்று வாழ்க்கை முழுவதும் என்னுடைய குடும்பத்துக்காக மட்டும் உழைப்பதை விட , கோடானக் கோடி குடும்பங்களைக் கொண்ட ஒடுக்கப்படும் உழைக்கும் வர்க்க மக்களின் விடுதலைக்காக உழைப்பது தானே சரி!

உன்னையெல்லம் பார்த்துவிட்டு, குடும்ப அமைப்பையே வெறுத்துவிட்டேன் என்று நினைக்காதே, சுதா! திருமணமே செய்துக் கொள்ளமாட்டேன் என்பதில்லை. நான், புரட்சியை முன்கொன்டு செல்ல முற்போக்கு கருத்துகளை, கொள்கைகளை வாய் வார்த்தைகளில் மட்டுமே பேசிவிட்டு செல்லாமல், நடைமுறைப்படுத்தும் முற்போக்கு எண்ணம் கொண்ட ஒருவரை திருமணம் செய்து கொண்டு வாழ விரும்புகிறேன். அதாவது, இந்திய உழைக்கும் மக்களின் விடுதலை என்ற இலட்சியத்தை அடைய, ஒரே நோக்கம் கொண்ட இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் புரட்சிகர குடும்ப வாழ்க்கை தானே சரியானது! அப்பொழுது தானே புரட்சிகரப் பணியை நான் தொடர்ச்சியாக செய்ய முடியும்; இல்லையெனில் பேசியதையெல்லாம் குப்பையில் போட்டு விட்டு உன்னைப் போல, நானும் இருக்க நேரிடும்.


படிப்பகம்

சுதா! கடைசியாக, கடிதத்தை முடிக்கு முன், நாம் இருவரும் 'வீரம் விளைந்தது' புத்தகத்தை படித்த போது, நிகலோய் ஒல்ஸ்த்ரோஸ்கி கூறிய சில வார்த்தைகளை நினைவு கூற விரும்புகிறேன்.

www.padippakam.com

'மனிதனுக்கு வாழ்க்கை ஒரு முறை தான் சொந்தமானது. எனவே, அவன் அக்காலக்கட்டத்தில் காலத்தை வீணடித்து விட்டோமே என்று எண்ணி வருத்தப்படாமல், என்னுடைய வாழ்க்கை முழுவதும், என்னுடைய சக்தி முழுவதும் உலகின் மகத்தான இலட்சியமான உழைக்கும் மக்களின் விடுதலைக்காக வாழ்ந்தோம் என்று இறக்கும் தருணத்தில் கூற வேண்டும்.'

– என்று இவர் கூறியதைப் போல காலத்தை வீணடிக்க விரும்பவில்லை. நானும் ஒரு நாள் இந்திய நாட்டு உழைக்கும் மக்களின் விடுதலைக்காக, புரட்சிகர போராட்டப் பாதையில் உயிர் கொடுத்தேன் என்று மகிழ்ச்சி அடைய விரும்புகிறேன், சுதா!

இப்படிக்கு

லதா

---

**த.பெ.க.வின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு**
**நிதி தாரீர்! ஆதரவு தாரீர்!**

அன்பார்ந்த நண்பர்களே!

தமிழகத்தில் பெண் விடுதலை என்ற விடியலைக் காண தொடர்ச்சியாக போராடிவரும் த.பெ.க. வின் முதல் மாநில மாநாடு 5.8.1995 ஆம் நாளன்று கொட்டும் மழையிலும் கைக்குழந்தைகளுடன் வந்த பெண்கள் முதல் மூதாட்டியாரின் உணர்ச்சி பூர்வமான கோஷங்களுடன் உத்வேகத்துடன் மதுரை மாநகரில் நடந்தேறியதை நீங்கள் அறிவீர்கள்!

இதன் தொடர்ச்சியாக த.பெ.க. தன்னுடைய இரண்டாவது மாநில மாநாட்டை வரும் மார்ச் மாதம் (மார்ச். 2000) சென்னையில் நடத்த இருக்கின்றது. இம்மாநாட்டை தங்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடத்த தங்களால் இயன்ற நன்கொடைக் கொடுத்து ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

த.பெ.க மாநிலக்குழு - தமிழ்நாடு

---


படிப்பகம்

www.padippakam.com

# சாப விமோசனம்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

பொழுது புலர்ந்துவிட்டது. கங்கைக் கரைமேல் இருவரும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

யாரோ ஆற்றுக்குள் நின்று கணீரென்ற குரலில் காயத்திரியைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஜபம் முடியுமட்டும் தம்பதிகள் கரையில் எட்டிக் காத்து நின்றார்கள்.

''சதானந்தா!'' என்று கூப்பிட்டார் கோதமர்.

''அப்பா... அம்மா'' என்று உள்ளத்தின் மலர்ச்சியைக் கொட்டிக் காலில் விழுந்து நமஸ்கரித்தார் சதானந்தர்.

அகலிகை அவனை மனசால் தழுவினாள். குழந்தை சதானந்தன் எவ்வளவு அந்நியனாகி விட்டான், தாடியும் மீசையும் வைத்துக் கொண்டு ரிஷிமாதிரி!

கோதமருக்கு மகனது தேஜஸ் மனசைக் குளுமையூட்டியது.

சதானந்தன் இருவரையும் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றான். சிரம பரிகாரம் செய்துகொள்ளுவதற்கு வசதி செய்து வைத்துவிட்டு, ஜனகனது தத்துவ விசார மண்டபத்துக்குப் புறப்படலானான்.

கோதமரும் உடன் வருவதாகப் புறப்பட்டார். மகனுக்கு அவரை அழைத்துச் செல்லுவதில் பிரியந்தான். நெடுந்தூரத்துப் பிரயாணமாச்சே என்று ரத்த பந்தத்தின் பரிவால் நினைத்தான். ஊழிகாலம் நிஷ்டையில் கழித்தும் வாடாத தசைக் கூட்டமா, இந்த நடைக்குத் தளர்ந்துவிடப் போகிறது? அவனுக்குப் பின் புறப்பட்டார். அவருடைய தத்துவ விசாரணையின் புதிய போக்கை நுகர ஆசைப்பட்டான் மகன்.

மிதிலையின் தெருக்கள் வழியாகச் செல்லும்போது, அயோத்தியில் பிறந்த மனத்தொய்வும் சோகமும் இங்கும் படர்ந்திருப்பதாகப் புலப்பட்டன கோதமருக்கு. அடக்கிவிட்ட பெருமூச்சு, காற்றினூடே கலந்து இழைந்தது.

ஜனங்கள் போகிறார்கள். வருகிறார்கள்; காரியங்களைக் கவனிக்கிறார்கள்; நிஷ்காம்ய சேவைபோல எல்லாம் நடக்கிறது; பிடிப்பு இல்லை; லயிப்பு இல்லை.

திருமஞ்சனக் குடம் ஏந்திச் செல்லும் அந்த யானையின் நடையில் விறுவிறுப்பு இல்லை; உடன் செல்லும் அர்ச்சகன் முகத்தில் அருளின் குதுகலிப்பு இல்லை.

இருவரும் அரசனுடைய பட்டிமண்டபத்துக்குள் நுழைந்தார்கள். சத்சங்கம் சேனா சமுத்திரமாக நிறைந்திருந்தது. இந்த அங்காடியில் ஆராய்ச்சி எப்படி நுழையும் என்று பிரமித்தார் கோதமர். அவர் நினைத்தது தவறுதான்.

ஜனகன் கண்களில் இவர்கள் உடனே தென்பட்டார்கள்.

அவன் ஓடோடியும் வந்து முனிவருக்கு அர்க்கியம் முதலிய உபசாரங்கள் செய்வித்து அழைத்துச் சென்று அவரைத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டான்.

ஜனகனுடைய முகத்தில் சோகத்தின் சோபை இருந்தது. ஆனால் அவன் பேச்சில் தழுதழுப்பு இல்லை; அவனுடைய சித்தம் நிதானம் இழக்கவில்லை என்பதைக் காட்டியது.

என்னத்தைப் பேசுவது என்று கோதமர் சற்றுத் தயங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com

''வசிட்டன் தான் கட்டிய ராஜ்யத்தில் உணர்ச்சிக்கு மதிப்பு அமைக்கவில்லை'' என்றான் ஜனகன், மெதுவாகத் தாடியை நெருடிக்கொண்டு.

ஜனகனின் வாக்கு, வர்மத்தைத் தொட்டுவிட்டது.

''உணர்ச்சியின் சுழிப்பிலேதானே உண்மை பிறக்கும்'' என்றார் கோதமர்.

''துன்பமும் பிறக்கும், உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாது போனால், ராஜ்யத்தைக் கட்ட ஆசைப்படும்போது அதற்கும் இடம் போட்டுவைக்க வேண்டும்; இல்லாவிட்டால் ராஜ்யம் இருக்காது'' என்றான் ஜனகன்.

''தங்களதோ ?'' என்று சந்தேகத்தை எழுப்பினார் கோதமர்.

''நான் ஆளவில்லை; ஆட்சியைப் புரிந்து கொள்ள முயலுகிறேன்'' என்றான் ஜனகன்

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்.

''தங்களது தர்ம விசாரணை எந்த மாதிரியிலோ?'' என்ற விநயமாகக் கேட்டான் ஜனகன்.

''இன்னும் ஆரம்பிக்கவே இல்லை; இனிமேல்தான் புரிந்து கொள்ள முயலவேண்டும்; புதிர்கள் பல புலங்களையெல்லாம் கண்ணியிட்டுக் கட்டுகின்றன'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் கோதமர்.

மறுநாள் முதல் அவர் ஜனகன் மண்டபத்துக்குப் போகவில்லை,

புத்தியிலே பல புதிர்கள் ஹிமாசலத்தைப்போல் ஓங்கி நின்றன. தனிமையை விரும்பினார். ஆனால் நாடிச் செல்லவில்லை. அகலிகை மனசு ஒடிந்துவிடக் கூடாதே!

மறுநாள் ஜனகன், ''முனீசுவரர் எங்கே?'' என்று ஆவலுடன் கேட்டான்.

''நிஷ்டையிலா?''

''இல்லை; யோசனையில்''

''அலை அடங்கவில்லை'' என்று தனக்குள்ளே மெதுவாகச் சொல்லிக் கொண்டான் ஜனகன்.

அகலிகைக்கு நீராடுவதில் அபார மோகம். இங்கே கங்கைக் கரையருகே நிம்மதி இருக்கும் என்று தனியா உதய காலத்திலேயே குடமெடுத்துச் சென்றுவிடுவாள்.

இரண்டொரு நாட்கள் தனியாக, நிம்மதியாக தனது மனசின் கொழுந்துகளைத் தன்னிச்சையோடு படரும்படி விட்டு, அதனால் சுமை நீங்கியதாக ஒரு திருப்பதியுடன் குளித்து முழுகி விளையாடி விட்டு நீர்மொண்டு வருவாள்.

இது நீடிக்கவில்லை.

குளித்துவிட்டுத் திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்துவந்து கொண்டிருந்தாள்.

எதிரே மெட்டிச் சப்தம் கேட்டது. ரிஷி பத்தினிகள் யாரோ ; அவர்கள் நீராடத்தான் வந்து கொண்டிருந்தார்கள் அவளைக் கண்டதும் பறைச்சியைக் கண்டதுபோல ஓடி விலகி, அவளை விறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றார்கள்.

''அவள்தான் அகலிகை'' என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக்கொண்டு பிறந்த சாபத்தீயைவிட அதிமாகச் சுட்டன அவ்வார்த்தைகள்.

அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. ''தெய்வமே : சாப விமோசனம் கண்டாலும் பாப விமோசனம் கிடையாதா? '' என்று



படிப்பகம்

www.padippakam.com

தேம்பினாள்.

யந்திரப் பாவைபோல இன்று கோதமருக்கும் சதானந்தருக்கும் உணவு பறிமாறினாள். ''மகனும் அன்னியனாகிவிட்டான்; அன்னியரும் விரோதிகளாகிவிட்டார்கள் ; இங்கென்ன இருப்பு?'' என்பதே அகலிகையின் மனசு அடித்துக்கொண்ட பல்லவி.

கோதமர் இடையிடையே பிரக்ஞை பெற்றவர்போல் ஒரு கவளத்தை வாயிலிட்டு நினைவில் தோய்ந்திருந்தார்.

இவர்களது மன அச்சத்தால் ஏற்பட்ட பளு சதானந்தனையும் மூச்சுத் திணற வைத்தது.

பளுவைக் குறைப்பதற்காக, ''அத்திரி முனிவர் ஜனகனைப் பார்க்க வந்திருந்தார். அகத்தியரைப் பார்த்துவிட்டு வருகிறார். மேருவுக்குப் பிரயாணம். ராமனும் சீதையும் அகத்தியரைத் தரிசித்தார்களாம். அவர்கள் இருவரையும், ''நல்ல இடம் பஞ்சவடி. அங்கே தங்குங்கள்'' என்று அகத்தியர் சொன்னாராம். அங்கே இருப்பதாகத்தான் தெரிகிறது'' என்றான் சதானந்தன்.

''நாமும் தீரத்தயாத்திரை செய்தால் என்ன ?'' என்று அகலிகை மெதுவாக கேட்டாள்.

''புறப்படுவோமா?'' என்று கைகளை உதறிக்கொண்டு எழுந்தார் கோதமர்.

''இப்பொழுதேயா?'' என்றான் சதானந்தன்.

''எப்பொழுதானால் என்ன?'' என்று கூறிக்கொண்டே, மூலையிலிருந்த தண்டு கமண்டலங்களை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கினார் கோதமர்.

அகலிகை பின் தொடர்ந்தாள்.

சதானந்தன் மனம் தகித்தது.

பொழுது சாய்ந்து, ரேகை மங்கிவிட்டது. இருவர் சரயூ நதிக்கரை யோரமாக அயோத்தியை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

பதினான்கு வருஷங்கள் ஓடிக் காலவெள்ளத்தில் ஐக்கியமாகிவிட்டன. அவர்கள் பார்க்காத முனிபுங்கவர் இல்லை. தரிசிக்காத க்ஷேத்திரம் இல்லை. ஆனால் மனநிம்மதி மட்டிலும் அவர்களுக்கு இல்லை.

வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கரனுடைய கோயில்போல, திடமற்றவர்களின் கால்களுக்குள் அடைபடாத கைலயங்கிரியைப் பனிச் சிகரங்களின் மேல் நின்று தரிசித்தார்கள்.

தமது துன்பச் சுமையான நம்பிக்கை வறட்சியை உருவகப் படுத்தின பாலையைத் தாண்டினார்கள்.

தம் உள்ளம்போலக் கொழுந்துவிட்டுப் புகைமண்டிச் சாம்பலையும் புழுதியையும் கக்கும் எரிமலைகளை வலம்வந்து கடந்தார்கள்.

தமது மனம்போல ஓயாது அலைமோதிக்கொண்டு கிடக்கும் சமுத்திரத்தின் கலையை எட்டிப் பின்னிட்டுத் திரும்பினார்கள்.

தம் வாழ்வின் பாதைபோன்ற மேடு பள்ளங்களைக் கடந்து வந்து விட்டார்கள்.

''இன்னும் சில தினங்களில் ராமன் திரும்பி விடுவான்; இனி மேலாவது வாழ்வின் உதயகாலம் பிறக்கும்'' என்ற ஆசைதான் அவர்களை இழுத்து வந்தது.

பதினான்கு வருஷங்களுக்கு முன் தாம் கட்டிய குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இரவோடு இரவாக, குடியிருக்க வசதியாகக் கோதமர் அதைச் செப்பனிட்டார். வேலை முடியும்போது உதய வெள்ளி சரித்தது.

இருவரும் சரயூவில் நீராடித் திரும்பினார்கள்.

கணவருக்குப் பணிவிடை செய்வதில் முனைந்தாள் அகலிகை. இருவரது மனமும் ராமனும் சீதையும் வரும் நாளை முன்னோடி வரவேற்றது. இருந்தாலும் காலக் களத்தின் நியதியை மனசைக் கொண்டு தவிர, மற்றபடி தாண்டிவிட முடியுமா?

ஒரு நாள் அதிகாலையில் அகலிகை நீராடச் சென்றிருந்தாள்.

அவள் முன்னே யாரோ ஒரு விதவை குளித்து விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள் ; யார் என்று அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை :; ஆனால் எதிரே வந்தவள் அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். ஓடோடியும் வந்து அகலிகையின் காலில் சர்வாங்கமும் தரையில் பட விழுந்து நமஸ்கரித்தாள்.

தேவி கைகேயி: தன்னந்தனியாக, பரிசனங்களும் வரிவாரமும் இல்லாமல், துறவியாகிவிட்டாளே!

குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவளை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினாள். அவளுக்குக் கைகேயின் செயல் புரியவில்லை.

''தர்ம ஆவேத்திலே பரதன் தன்னுடைய மனசில் எனக்கு இடம் கொடுக்க மறந்து விட்டான்'' என்றாள் கைகேயி.

குரலில் கோபம் தெறிக்கவில்லை ; மூர்த்தண்யம் துள்ளவில்லை. தான் நினைத்த கைகேயி வேறு; பார்த்த கைகேயி வேறு. படர்வதற்குக் கொழுகொம்பற்றுத் தவிக்கும் மனசைத்தான் பார்த்தாள் அகலிகை.

இருவரும் தழுவிய கை மாறாமல், சரயூவை நோக்கி நடந்தார்கள்.

''பரதனுடைய தர்ம வைராக்கியத்துக்கு யார் காரணம்?'' என்றாள் அகலிகை. அவளுடைய உதட்டின் கோணத்தில் அநுதாபம் கனிந்த புன்சிரிப்பு நெளிந்து மறைந்தது.

''குழந்தை வைத்த நெருப்பு ஊரைச் சுட்டு விட்டால் குழந்தையைக் கொன்று விடுவதா ?'' என்றால் கைகேயி.

குழந்தைக்கும் நெருப்புக்கும் இடையில் வேலி போடுவது அவசியம்தான் என்று எண்ணினாள் அகலிகை. ''ஆனால் எரிந்தது எரிந்ததுதானே?'' என்று கேட்டாள்.

''எரிந்த இடத்தைச் சுத்தப்படுத்தாமல் சாம்பலை அப்படியே குவித்து வைத்துக்கொண்டு சுற்றி உட்கார்ந்திருந்தால் மட்டும் போதுமா?'' என்றாள் கைகேயி.

''சாம்பலை அகற்றுகிறவன் இரண்டொரு நாட்களில் வந்து விடுவானே'' என்றாள் அகலிகை.

''ஆமாம்'' என்றாள் கைகேயி. அவள் குரலில் பரம நிம்மதி தொனித்தது. ராமனை எதிர்பார்த்திருப்பது பரதனல்ல ; கைகேயி.

மறுநாள் அவள் அகலிகையைச் சந்தித்தபொழுது முகம் வெறிச்சொடியிருந்தது ; மனசு நொடிந்து கிடந்தது.

''ஒற்றர்களை நாலு திசைகளிலும் விட்டு அனுப்பிப் பார்த்தாகி விட்டது. ராமனைப்பற்றி ஒரு புலனும் தெரியவில்லை. இன்னும் நாற்பது நாழிகை நேரத்துக்குள் எப்படி வந்துவிடப் போகிறார்கள் ? பரதன் பிராயயோபவேசம் செய்யப் போகிறானாம். அக்கினிக் குண்டம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறான்'' என்றாள் கைகேயி.


படிப்பகம்

www.padippakam.com

பரதன் எரியில் தன்னை அவித்துக் கொள்ளுவது தன்மீது சுமத்தப்பட்ட ராஜ்ய மோகத்துக்கு தக்க பிராயச்சித்தம் என்று அவள் கருதுவதுபோல இருந்தது பேச்சு.

சற்று நிதானித்து, ''நானும் எரியில் விழுந்துவிடுவேன் ; ஆனால் தனியாக அந்தரங்கமாக'' என்றாள் கைகேயி. அவள் மனசு வைராக்கியத்தை தெறித்தது.

பதினான்கு வருஷங்கள் கழித்து மறுபடியும் அதே உணர்ச்சிச் சுழிப்பு. அயோத்திக்கு ஏற்பட்ட சாபத்தீடு நீங்கவில்லையா?

அகலிகையின் மனசு அக்குத்தொக்கு இல்லாமல் ஒடியது. தனது காலின் பாபச் சாயை என்றே சந்தேகித்தாள்

''வசிட்டரைக் கொண்டாவது அவனைத் தடை செய்யக் கூடாதோ ?'' என்றாள் அகலிகை.

''பரதன் தர்மத்துக்குத்தான் கட்டுப்படுவான் ; வசிட்டருக்குக் கட்டுப்படமாட்டான்'' என்றாள் கைகேயி.

''மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்துக்குச் சத்துரு'' என்று கொதித்தாள் அகலிகை.

தன்னுடைய கணவர் பேச்சுக்குப் பரதன் ஒருவேளை கட்டுப்படக்கூடாதோ என்ற நப்பாசை. மறுபடியும் அயோத்தியில் துன்பச் சக்கரம் சுழல ஆரம்பித்துவிடக் கூடாதே என்ற பீதி.

கோதமன் இணங்கினான். ஆனால் பேச்சில் பலன் கூடவில்லை.

பரதனை உண்டு பலிகொள்ள அக்கினி தேவன் விரும்பவில்லை.

அனுமன் வந்தான் ; நெருப்பு அவிந்தது. திசைகளின் சோகம் கரை உடைந்த குதுகல வெறியாயிற்று. தர்மன் தலைசுற்றியாடியது.

வசிட்டனுக்கும் பதினான்கு வருஷங்கள் கழித்த பிறகாவது கனவு பலிக்கும் என்று மீசை மறைவில் சிரிப்புத் தள்ளாடியது.

இன்ப வெறியில் அங்கே நமக்கு என்ன வேலை என்று திரும்பி விட்டான் கோதமன்.

சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள். வரவேற்பு ஆராவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தை விட்டு இறங்கின ராமனது நெற்றியில் அனுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அனுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோக்ஷ லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக் கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்று விட்டான்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை அவளை அழைத்துச் சென்றாள். இருவரும் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச் சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னால் சீதை. ராமனுடன் சேர்ந்து விட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது?

அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள். அகலிகை துடித்து விட்டாள்

'அவர் கேட்டாரா ? நீ ஏன் செய்தாய் ? ' என்று கேட்டாள்

'அவர் கேட்டார் ; நான் செய்தேன்' என்றாள் சீதை, அமைதியாக.

'அவன் கேட்டானா ?' என்று கத்தினாள் அகலிகை ; அவள் மனசில் கண்ணகி வெளி


படிப்பகம்

www.padippakam.com

தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா?

ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா ?

இருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தனர்.

''உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா ?'' என்று கூறி மெதுவாகச் சிரித்தாள் சீதை.

''உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா? '' என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது.

''நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா ; உள்ளத்தைத் தொடவில்லையானால் ? நிற்கட்டும் ; உலகம் ஏது ?'' என்றாள் அகலிகை.

வெளியிலே பேச்சுக் குரல் கேட்டது. அவர்கள் திரும்பி விட்டார்கள்.

சீதை அரண்மனைக்குப் போவதாக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது ; காலில் படிந்த தூசிஅவனைச் சுட்டது.

ரதம் உருண்டது ; உருளைகளின் சப்தமும் ஓய்ந்தது.

கோதமன் நின்றபடியே யோசனையில் ஆழ்ந்தான். நிலைகாணாது தவிக்கும் திரிசங்கு மண்டலம் அவன் கண்ணில் பட்டது.

புதிய யோசனை ஒன்று மனக்குகையில் மின்வெட்டிப் பாய்ந்து மடிந்தது. மனச்சுமையை நீக்கிப் பழைய பந்தத்தை வருவிக்க, குழந்தை ஒன்றை வரித்தால் என்ன? அதன் பசலை விரல்கள் அவள் மனசின் சுமையை இறக்கிவிடவா?

உள்ளே நுழைந்தான்.

அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம், மறக்கவேண்டிய இந்திர நாடகம், மனத்திரையில் நடந்துகொண்டிருந்தது.

கோதமன் அவளைத் தழுவினான்.

கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப்பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக் கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

மனச் சுமை மடிந்தது.

கைலயங்கிரியை நாடி ஒற்றை மனித உருவம் பனிப்பாலைவனத்தின் வழியாக விரைந்து கொண்டிருந்தது.

அவன் தான் கோதமன்... அவன் துறவியானான்.

**–புதுமைப்பித்தன்**

***(புதுமைப்பித்தன் தமிழ் இலக்கிய சிறுகதை வரலாற்றில் முத்திரைப் பதித்த பெயர். மேலை நாட்டு இலக்கியத் தாக்கத்தால், யதார்த்தத்திலிருந்து விலகிய படைப்புகள் வந்துக் கொண்டிருந்த காலத்தில், யதார்த்தத்தையே மையமாகக் கொண்ட படைப்புகளைப் படைத்தவர். புதுக்கவிதைக்கு பாரதி எப்படியோ, அதுபோல சிறுகதைக்கு புதுமைப்பித்தன். அவர் இன்று இல்லை. அவர் படைப்புகள் என்றும் மக்களுடன் ஐக்கியமாகியுள்ளது. )***


படிப்பகம்

# பெல்லி லலிதாவின் கனவை நனவாக்குவோம்!

www.padippakam.com

நல்கொண்டா மாவட்டத்திலுள்ள பொஹிங்கர் கிராமத்தில் பிறந்த பெல்லி லலிதா ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்தவர். படிப்பறிவற்றவராக இருப்பிலும், அனைத்து விசயங்களையும் திறனாயும் திறமைப் பெற்றவர். அவர் வேலை செய்யும் துணி மில்லிலுள்ள தொழிலாளர்களை மிகுந்த ஆர்வத்துடன் அமைப்பாக்கியவர்.

'தெலுங்கான ஜன சபா' வின் (தனி தெலுங்கானாவிற்காகப் போராடும் அமைப்பு) கலை இயக்கமான 'தெலுங்கானா கலை சமிதி' யின் துணைஒருங்கிணைப்பாளராகவும், யாதவர்களின் இயக்கமான 'தோல் தேபா' வின் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வந்தார். தனி தெலுங்கானா கோரிக்கையை முன் வைத்து கலை நிகழச்சிகள் மூலம் இவர் செய்த பிரச்சாரம் தென் தெலுங்கானா மக்களை ஈர்த்தது. அவர் பாடும் பொழுதெல்லாம் அவரை சுற்றி பெரிய கூட்டமே சேர்ந்து விடும் அளவுக்கு, செல்வாக்குப் பெற்றிருந்தார். குறுகிய காலத்தில் தெலுங்கானாவில் அனைவராலும் விரும்பக்கூடியத் தோழரானார்! உள்துறை அமைச்சரின் தொகுதியில் லலிதா, செல்வாக்கு மிருந்த தலைவரானார்! மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த இவரின் செல்வாக்கு, ஆட்சியாளர்களை குலை நடுங்க வைத்தது.



தோழர். பெல்லி லலிதா

லலிதா மக்கள் மத்தியில் பாட ஆரம்பித்த நாள் முதல் கொண்டே ஆந்திர போலீஸ், அவரை பின் தொடர்ந்து அச்சுறுத்தியது. கடைசியாக, அவர் பாடுவதை நிறுத்தவில்லையெனில், பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று மிரட்டியது. ஆனால், இந்த மிரட்டலுக்கெல்லாம் லலிதா அசரவில்லை, இறுதியாக, மே மாத கடைசி வாரத்தில் லலிதாவை கூடிய சீக்கிரத்தில் பொட்டலம் செய்து விடுவோம் என்று அச்சுறுத்தியது. சொன்னது போலவே, லலிதாவை 17 பாகமாக வெட்டி பொஹிங்கரின் மூன்றுப் பகுதிகளில் தூக்கியெறிந்துவிட்டது, கொலை வெறி பிடித்து அலையும் ஆந்திர போலீஸ்!

***மே மாதம் 26ம் நாளன்று, மாலை 3.00 மணிக்கு அருகிலுள்ள சகோதரியிடம் உணவு தயாரிக்கக் கூறிவிட்டு, ஐந்து நிமிடத்தில் வருவதாகக் கூறி சென்ற லலிதா திரும்பவில்லை!.***

இதற்கிடையே ஆணாதிக்க வக்கிர புத்தியுடைய ஆந்திர காவல் துறை கொலையை மூடி மறைத்துவிட்டு, ஒரு அமைப்பாளருடன் தொடர்பு கொண்டு, அவர் லலிதாவுக்கு எய்ட்ஸ் இருப்பதாக கூறியதைத் தாங்க முடியாத லலிதா, யாரையும் பார்க்க முடியாமல் ஓடி விட்டார் என்றுக் கட்டுக் கதையை விட்டது, இப்படி கூறியாவது தாங்கள் செய்ததை நியாயப்படுத்தலாம், சட்டப்பூர்வமாக்கலாம் என்று எண்ணியது. மக்கள் இதை நம்பவில்லை! மறுதினமே ஆந்திர காவல்துறையின் இந்தக் கொடூரப் போக்கை எதிர்த்துக் கொதித்தெழுந்த நல்கொண்டா மக்கள், லலிதாவைப் பற்றி விசாரணை நடத்தும்படி ஊர்வலமாக சென்றனர்.

மக்களின் கடுமையான எதிர்ப்பிற்குப் பின், போலீஸின் ஏஜென்டான அலுமுதின் என்பவனால் லலிதா 17 பாகமாக வெட்டப்பட்டு கொல்லப்பட்டார் என்பதை போலீஸ் தெரிவித்தது. 14 நாட்களுக்குப் பின்தான் லலிதாவின் உடல் கிடைத்தது. ***பெல்லி லலிதாவின் இறுதி ஊர்வலத்தில் 10,000 மக்கள் கலந்துக் கொண்டு தங்கள் செவ்வணக்கத்தை தெரிவித்தனர்!***

***தோழர்களே! பெல்லி லலிதா நம்மை விட்டு சென்றாலும், அவர் விட்டு சென்றுள்ள உன்னதமான இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்! பெல்லி லலிதா போன்ற எண்ணற்ற தோழர்களை கொன்று குவிக்கும் ஆந்திர போலீஸின் கொலை வெறித் தாக்குதலை எதிர்த்துக் குரல் கொடுப்போம்!!!***

*-நிர்மலா*



படிப்பகம்

www.padippakam.com

# எனக்கு பெயர்தான் பெண்ணா ?

-செங்கனல்

வழமை போலவே விடிந்த உடனே
விளக்குமாற்றைக் கையிலெடுத்து
வீடு முற்றம் பெருக்குதற்கென்றே
விதிக்கப்பட்ட அடிமையா நான்?

விடிந்து சூரியன் வெளிவரத் தொடங்கியும்
விழிகள் மூடிப் புரண்டுப் படுக்கும்
படுத்தபாயினைச் சுருட்டி வைக்கவும்
பழக்கப்படாத எனது சகோதரன்

சோம்பல் முறிக்கும் காலைத்தேனீர்
அத்துடன் காலை ஆகாரம் தேடல்
அனைத்து வேலையும் சுமத்தப்பட்ட
அடிமைத் தனத்தின் பிரசவிப்பா நான்?
வரையப்படாத வேலைப்பட்டியல்
வகுத்துத் தந்த வேலையிலொன்று
காலை உணவு முடிந்த பின்னாலே
பானை சட்டி உரசிக் கழுவுதல்.
இவையவர் மூத்தவர் பெற்றோர்களினது
மனதைத் துவைக்கும் உடுப்புத் துவைத்தல்
பணிக்கப்படாத கட்டளையாகி
திணிக்கப்பட்ட அடிமையா நான்?

சிட்டுக்குருவிபோல் என்னுடன் பிறப்புகள்
கட்டுக்கடங்காது ஊர் சுற்றி வருவர்
இறக்கைகள் வெட்டிய பறவையைப்போலே
பறக்கும் சுதந்திரம் இழந்தவளா நான்?

தீர்மானிக்கும் உரிமையை இழந்தவள்
முடிவு எடுக்கும் தைரியம் பறிக்கப்பட்டவள்
அடிமைத்தனத்தைப் பொறுமையாய் ஏற்றவள்
எனக்கு உரிய பெயர்தான் பெண்ணா?

நன்றி -நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை

படிப்பகம்